# தொண்டன்

ஆரம்பம்: 1969-பெப்ரவரி



"விசுவாசத்திற்கும் மனித
உறவுகளுக்கும்
சேவையாற்றுவதே பணி"

SERVIRE FIDEM ET COMMUNIONEM

## வெள்ளிவிழாக் காணும் ஆயர்




## புதிய துணை ஆயர்

"கிறிஸ்துவின் பணிவான நறுமணம் பரப்ப.."

மே - 2008 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்


மே - 2008

மலர்- 40 இதழ்- 04



**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

ஸ்ரான்லி பிரபாகரன்



**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 02 |
| மாண்புமிகு ஆயர்... | - | 03 |
| கிழக்கு நாட்டின்... | - | 08 |
| யார் இந்த மாணவ... | - | 09 |
| தவத்தார் பெற்ற... | - | 11 |
| இலக்கிய மஞ்சரி... | - | 12 |
| நமது ஆயரின்... | - | 13 |
| வாழிய பல்லாண்டென... | - | 14 |
| ஆயருள் மகிமை... | - | 15 |
| செபமாலை... | - | 16 |
| ரெதண்டனின் சில நிமிடங்கள்... | - | 17 |
| உங்கள் சுகமான... | - | 19 |
| அன்றிருந்தது போலவே... | - | 20 |
| மக்களின் துயர்... | - | 22 |
| மாணவர் பக்கம்... | - | 25 |
| வெள்ளிவிழாக் காணும்... | - | 26 |
| சிலப்பதிகாரத்தில் சில... | - | 28 |
| வாழ்க வாழ்க... | - | 29 |
| புதிய ஏற்பாட்டு ஒழுக்க... | - | 30 |
| அருள்தந்தை தியோப்பிளஸ்... | - | 31 |
| அன்பினால் மக்களை... | - | 32 |
| நானறிந்த ஆயர்... | - | 34 |
| விவிலியம் கற்போம்... | - | 35 |
| அறிவை வளர்ப்போம்... | - | 36 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486


விலை : *20/=*

ஆண்டு சந்தா : *350/=*

*(தபாற்செலவு உட்பட)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

இறையரசைப் பரப்பும் பணியில் இறைவனால் பெயர் சொல்லி விசேடவிதமாக அழைக்கப்படுபவர்கள்தான் குருக்களும், துறவிகளும். இந்த உன்னத அழைத்தலலிலே இராயப்பரின் வழித்தோன்றலாக உயர்த்தப்படுபவர்தான் பாப்பரசர். "மண்ணுலகில் நீ தடை செய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" (மத்தேயு: 16:19) என்ற மாபெரும் பொறுப்பை பாப்பரசர் தன்னகத்தே கொண்டு திருச்சபையை கட்டிக்காக்கின்றார்.

மறைமாவட்டங்களை கிறிஸ்துவின் ஒளியில் இட்டுச்செல்ல, மறையைப் பரப்ப, மந்தைகளை நெறிப்படுத்த ஆயர்கள் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். குருத்துவத்தின் முழுமை ஆயர்த்துவத்திலேதான் நிறைவாகிறது. ஒவ்வொரு மறைமாவட்டத்துக்குமென நியமிக்கப்படும் ஆயர் விசுவாசிகளின் ஆன்மீகத் தேவையோடு இணைத்து மனித, சமூக, பொருளாதார, கலை, கலாசார, பண்பாட்டு விடயங்கள் யாவற்றையும் உள்ளடக்குவதோடு பல்சமய உறவுகளையும் பேணி சமூகத்தின் பல்தரப்பட்ட வளர்ச்சிக்கு அச்சாணியாகத் திகழுவதையே திருச்சபை எதிர்பார்க்கின்றது.

அந்த வகையில் நமது மறைமாவட்டத்தில் அரும்பெரும் சேவை புரிந்து அதில் 25 ஆண்டுகளை நிறைவுசெய்து இன்னும் களைக்காமல், சளைக்காமல் பணிபுரியும் ஆயர் பேரருட்தந்தை கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பெருமைக்குரியவரே.

ஏனெனில் அவரது பணி பன்முகப்படுத்தப்பட்டது. அவரது புத்தி சாதுரியத்தினாலும், மென்மையான பேச்சினாலும், ஆழமான கருத்துகளாலும், செல்லச் சிரிப்பாலும், இராஜதந்திர காய்நகர்த்தலினாலும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கிலங்கையினையே தன் வசப்படுத்திருக்கின்றார். பாமரன், பண்டிதன், ஏழை-கோடீஸ்வரன், அரசியல்வாதி-போராளி, இராணுவம் இப்படியான எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளோ, பாரபட்சங்களோ, வேற்றுமைகளோ எதுவுமின்றி அனைவருக்கும் ஆயனாக அனைவரையும் ஆதரிப்பதிலும், ஆற்றுப்படுத்துவதிலும், செப்பனிடுவதிலும் ஏன் எச்சரிப்பதிலும்கூட ஒரு மாபெரும் சாணக்கியன்தான்.


1983ம் ஆண்டு வைகாசித்திங்கள் 7ம் திகதி ஆயர் அவர்கள் நமது மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்துக்கொண்டார். 1983ம் ஆண்டு என்றாலே நமக்கெல்லாம் ஞாபகம் வருவது கறுப்பு ஜூலை. ஆகவே அந்தப் பொல்லாத, பயங்கர காலகட்டத்திலிருந்து இயற்கை அனர்த்தங்கள், இன்றைய பிரதேசவாத பிரச்சினைகளோடு, போராளிகளின் பிளவுபட்ட காலம் வரைக்கும் எல்லாச் சவால்களுக்கும் முகங்கொடுத்துள்ளார். 2006ம் ஆண்டு மார்கழி 25ம் திகதி கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி வேளையில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுடப்பட்டார். சுட்டவர்கள் ஆயரையும் பழிதீர்க்க அதிக நேரம் தேவைப்பட்டிருக்காது. ஏன் அவ்வாறு நடக்கவில்லை என்று யோசித்தால் அதற்குக் காரணம் ஆயரின் இராஜதந்திர உறவுகளும், சாணக்கியமும்தான். நமது மறைமாவட்டத்தின்மீது அவர் கொண்டுள்ள ஆழமான பற்று எதில் வெளிப்படுகின்றது என்றால் மண்ணின் மைந்தன் ஒருவரை துணைஆயராக நியமிக்கப்பட செயற்பட்ட கைங்கரியத்தில்தான். இவ்வாறு நோக்குகையில் ஆயர் அளப்பரிய தொலைநோக்கு மிக்கவர்.

புதிய துணை ஆயர் பேரருட்திரு. பொன்னையா ஜோசப் அடிகளை நாம் ஆரத்தழுவி வரவேற்கின்றோம். நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கனவு நனவாகி இருக்கின்றது. ஏனெனில் ஒரு நல்ல மேய்ப்பனுக்குள்ள எல்லாக் குணாம்சங்களையும் தன்னகத்தே கொண்டவர் நமது புதிய துணை ஆயர்.

சாதாரணமாகப் புதிய பொறுப்பை ஏற்ற ஒருவரிடம் எதிர்பார்க்கப்படுவதைப்போல் கிழக்கிலங்கைத் திருச்சபை இவரிடத்திலிருந்தும் அதிகம் எதிர்பார்த்து நிற்கின்றது.

ஆயர்த்துவ வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த ஆயர் பேரருட்தந்தை கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையை இன்னும் நீடூழி வாழ்ந்து எம்மை வழிநடத்த வேண்டுமென்று வாழ்த்தி வேண்டுவதோடு புதிய துணையாயர் பேரருட்திரு. பொன்னையா ஜோசப் ஆண்டகைக்கும் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**- ஆசிரியர்**



## இறைவாக்கு

"உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும்."

(மாற்கு: 10:44)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -



# மாண்புமிகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை

**கா**கால்நூற்றாண்டுகள் பணித்தளத்தில், போர்க்களமாகவும் அனர்த்தகளமாகவும் இனக்கலவரமாகவும் இயங்கிய பணித்தளத்தில் நல்லாயனாக போராற்றல்மிகு பெருந்தலைவனாக விளங்கும் மாண்புமிகு ஆயருக்கு இச்சிறு கட்டுரையை ஆரமாக அணிவித்து அணிசெய்ய முற்படுகின்றோம்.

"மூங்கையான் மொழியலுற்றான் என யான் மொழியலுற்றேன்" என்ற அவையடக்கத்தைப் பணிவோடு எடுத்துக்கூறி பரமன் அளித்த பன்முகங்கள் கொண்ட இறை நேசனுக்கு அஞ்சலிகள் பல கூறி ஆயிரம் ஆயிரம் உள்ளங்களில் இருந்துவரும் வாழ்த்துகள் பற்பலவாகி அவரது பணிகள் மேலும் சிறக்க இறை ஆசியைக் கேட்டு நிற்கின்றோம்.

"கர்த்தர் நகரத்தைக் காக்கா விட்டால் காக்கிறவன் கண்விழிப்பது வீண்" இது மறைவாக்கியம். எவர் எதைக் குறிப்பிட்டாலும் பாலைவனத்தில் திக்குத் தெரியாத அடர்ந்த கொதிக்கும் வெயில் சுட்டெரிக்கின்ற வேளையில் மோயீசனுக்கு அன்று மேகம் வழிகாட்டியது போன்று ஆயரின் வழிகாட்டல்கள் அமைந்தன.

ஆயரின் போக்கு நிதானமானது. ஒரு சிறந்த முகாமையாளனுக்குரிய பண்புகளை நிறையவே கொண்டது. வாழ்வின் சிறந்த எல்லாப் படிகளிலும் நிலைகளிலும் இருக்கவேண்டும் என்ற கற்பனை வளம், மிக விரைவாக சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ளும் ஆற்றல், அவற்றைச் செயற்படுத்தும் துணிவு, ஒரே நேரத்தில் பல கருமங்களை ஆற்றக்கூடிய தசாவதானி என வர்ணிக்கக் கூடிய ஒருவர் ஆயர் அவர்கள். இரண்டாம் வத்திக்கான் சங்கம் உலகிற்குத் திருச்சபையை வெளிக்காட்டியது. திருச்சபையும் உலகைப் புரிந்துகொண்டது. எல்லாரிலும் இறைவன் இருக்கிறான். பல்வேறு மக்களின் கலாசாரங்களும் உயர்வானவை என்பதை உலகிற்கு உணர்த்தியது இச்சங்கம். இதனாலேயே மறைந்த பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர் தாம் மேற்கொண்ட நாடுகளின் விஜயத்தின் பொழுது அந்தந்த நாட்டின் பூமியை முத்தமிட்டார். அதன் மூலம் அந்நாட்டையும் அந்நாட்டு மக்களையும் அதன் கலாசாரங்களையும் முத்தமிட்டுப் போற்றினார். இத்தகைய பாப்பரசரினால் ஆயராக உயர்த்தப்பட்ட ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயர் அவர்கள் தம்முடைய பார்வையில் சமூகத்தை எடைபோட்டு சமூகச் சமயத் தலைவர்களோடும் அரசியல் மற்றும் ராஜதந்திரிகளோடும் தொடர்புகளை மேற்கொண்டு அன்பு வழியில் ஒரு மகத்தான தொண்டனாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

மேற்கூறிய கூற்றுக்கான ஆதாரங்களை, சிறு கண்ணோட்டத்தில் அவரை ஓரளவு மட்டுமே சுட்டிக்காட்டலாம். அவரை அறிய வருவோர் எண்ணிக்கை ஆயிரமாயிரம்

திருமலை மட்டக்களப்பு ஆயர் மாண்புமிகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களைப் பற்றிய இக்கட்டுரையின் தலைப்பு பல தத்துவக் கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. உன்னத இலட்சியங்கள், வெறுமனே இலட்சியங்களாக இருக்கும் வரையில் அவர்களை அறிவோர் வெகு சிலரே. தத்துவங்களும் இலட்சியங்களும் புற அடையாளங்களாகவும் வெளி உருவங்களாகவும் எழுந்து நிற்கும்போது அவர்களை அறிய வருவோர் எண்ணிக்கை ஆயிரமாயிரம் இலட்சியங்களுக்கு உருவம் கொடுத்து நிகழ்காலத்தில் மனிதனாகச் சறந்த ஒருவர். இக்கட்டுரை அவரின் பல முகங்களில் சிலவற்றைப் பார்க்க எத்தனிக்கிறது.

கிறிஸ்தவம் எல்லா இனங்களிற்கும் உரியது. எல்லாப் பண்பாடுகளையும் ஏற்கக் கூடியது. இதனை ஆயர் அவர்கள் தம் வாழ்க்கையில் சாதித்துள்ளார். கிறிஸ்தவத்துக்கு இரண்டாம் வத்திக்கான் தந்த அறைகூவலுக்கு ஏற்புடைய உருவமும் உயிரும் அளித்த ஆயர்களுள் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயர் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

"விசுவாசத்திற்கும் மனித உறவுகளுக்கும் சேவையாற்றுவதே பணி" என்ற விருது வாக்கியம் ஆயரின் இலட்சியக் கோட்பாடாகும். 07.05.1983ல் கருதினால் ஆஞ்சலோ ரோசியாவினால், உரோமாபுரி மறைபரப்புக் கல்லூரியில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார், அருள்பணி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அவரின் வாழ்க்கைக் கண்ணோட்டம்

-சுருக்கமாக-

| | |
|---|---|
| பிறப்பு | : 09.12.1936 கரம்பன், ஊர்காவற்றுறை |
| ஆரம்ப கல்வி | : புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை |
| இடைநிலை கல்வி | : புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் |
| மெய்யியல் | : தேசியக் குருத்துவக் கல்லூரி, கண்டி 24.08.1955 |
| இறையியல் | : மறைபரப்புக் கல்லூரி, உரோமாபுரி |
| குருவாக | : 20.12.1961, உரோமாபுரி |

## சேவையும் சேவைத்தளங்களும்

- யூலை 1962-ஒக்டோபர் 1963 : உதவிப்பங்குத்தந்தை, கிளிநொச்சி
- ஒக்டோபர் 1963-ஜனவரி 1964 : உதவிப்பங்குத்தந்தை, ஊர்காவற்றுறை
- ஜனவரி 1964-ஒக்டோபர் 1964 : உதவிப்பங்குத்தந்தை, முல்லைத்தீவு
- செப்டம்பர் 1964-மே 1965 : உதவி இயக்குனர், பண்ணைப் பாடசாலை, கிளிநொச்சி
- செப்டம்பர் 1965-ஒக்டோபர் 1966 : பங்குத்தந்தை, நாவாந்துறை
- ஒக்டோபர் 1966-ஒக்டோபர் 1967 : மடுமாதா யாத்திரை ஸ்தலத்தின் உதவி நிர்வாகியும், பண்டிவிரிச்சான் பங்குத்தந்தையும்
- ஒக்டோபர் 1967-மே 1969 : மடுமாதா யாத்திரை ஸ்தலத்தின் உதவி நிர்வாகியும், செட்டிக்குளம் பங்குத்தந்தையும்
- மே 1969-மே 1970 : பணிப்பாளர், பண்ணைப் பாடசாலை, கிளிநொச்சி
- மே 1970-டிசம்பர் 1970 : யாழ்மறை ஆயரின் பிரத்தியேகச் செயலாளர்
- ஜனவரி 1973 தொடக்கம் : யாழ் மறைமாவட்டச் செயலாளர் நாயகம், யாழ் மறைமாவட்டப் பாடசாலைகளின் பொது முகாமையாளர், யாழ் மறைமாவட்டத்தின் சான்சலர், பாப்பரசரின் மறைபரப்புச் சங்கத்தின் தேசிய இயக்குனர்
- ஜூன் 07. 1983 : திருமலை மட்டக்களப்பு மாவட்ட ஆயர்

மாண்புமிகு ஆயர் அவர்களின் பல்துறைப் பணிகள் கட்டுரை வடிவிலேனும் ஆவணப்படுத்தப்படல் வேண்டும் என்ற வேணவா உந்த 15.05.1999ல் அவருடன் ஒரு நேர்காணல் ஏற்படுத்தினோம். அதன் விளைவாக அவரின் பின்வரும் எண்ணங்கள், இலட்சியங்கள், செயற்பாடுகள் குறிக்கப்படுகின்றன. அவரின் பிரதான குறிக்கோள் "திருச்சபை என்ற மக்கள் இராச்சியத்தைக் கட்டியெழுப்புவதாகும்"

இதற்கு உறுதுணையாக முதலில் மக்கள் வளங்களைக் கட்டியெழுப்புவது. இதன் முதல் நோக்கம் "மறைமாவட்ட சுதேச குருக்களைக் கட்டி எழுப்புவதும், துறவிகளின் முழுமையான தொண்டுகளைப் பெறுவதுமாகும்"

ஏற்கனவே இருந்த கட்டமைப்புகளை வலுப்படுத்துவது. இதன் முக்கிய அம்சங்களாவன:

- குருமடத்தின் உயர்வான வளர்ச்சி
- சமுக நலன் பேணும் நிறுவனம் எகெட்
- திருமலை, விவிலிய அமைப்புகளின் வலுவாக்கம்
- வெகுசனத் தொடர்பாடல் சாதனங்களின் வலுவுள்ளதும், செயற்படுதன்மை மிக்கச் சேவைகளை இனங்கண்டு உயிரூட்டல்

"இன்றைய கிறிஸ்தவ, கத்தோலிக்கத் திருச்சபைகள் நம்மைச் சுற்றி வாழும் இந்து, முஸ்லிம் மக்களோடு இரண்டறக் கலந்துள்ளன" இதற்கு நாம் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். நாம் ஒருவர் மற்றவரிற் தங்கி வாழ்கின்றோம்.

"நமது பெரிய பிரச்சினை, இன்றைய பிரச்சினை சிங்கள தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்களின் பிணக்குகளே. ஒரு கொடிய நீண்ட கோர யுத்தத்திலே நாடு ஈடுபட்டுள்ளது. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் சிறுபான்மை இனங்களான தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை காண்பது, ஒற்றுமை வளர்ப்பது, சமய சாகிய அடிப்படையிலேயே ஒருமைப் பாடு காண விளைவது" இவ்வாறு ஆயர் அவர்கள் கருத்து வெளியிட் டார்கள்.

இந்த உயரிய குறிக்கோளை மனதிலே தாங்கி ஆயர் அவர்கள் கடந்த 23 ஆண்டுகளாக உழைத் துள்ளார்கள். அதிலே வெற்றி காண்ப தற்காக பல அமைப்புகளை உருவாக் கியுள்ளார்கள்.

1983 ஜூலை 22ம் நாள் கலவரம் வடக்கு, தெற்கு, மலையகம் முழுவதிலும் கிளர்ந்தெழுந்தது. சிறுபான்மை மக்கள் தம் உடல், பொருள், எதிர்காலம் இழந்து தவித் தார்கள்.

எங்கும் அகதிகள், இவர்கள் ஆயிரமாயிரம் அகதிகள். கொழும்பில் இருந்தும், மலையகத்தில் இருந்தும் கிழக்கு நோக்கி வந்தார்கள். உடனடியாக அவர்கள் அரச கட்டிடங் களிலும் குறிப்பாகப் பாடசாலைகளிலும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டார்கள்.

அவர்கள் வாழ்வதற்கு ஒரு புனருத்தாரணம் அவசியம் காணப்பட்டது. அவர்கள் மீண்டும் தம் பழைய இடங்களுக்குச் செல்வதும் உசிதமாகக் காணப்படவில்லை. அவர்களைக் கிழக்கில் குடியமர்த்தும் பாரிய திட்டத்தில் ஆயர் அவர்களின் முழுக்கவனமும் சென்றது. தேசிய கத்தோலிக்க சமூக சேவை நிறுவனம் (SEDEC) உட்பட சர்வதேச ரீதியிலும், கத்தோலிக்கக் கிறிஸ்தவ நிறுவனங் களின் உதவிகளை உடன் பெற்று சுமார் 200க்கும் அதிகமான குடும் பங்கள் ஆயரின் பெருமுயற்சியினால் கிழக்கிலிருந்த கத்தோலிக்கத் திருச்சபைக்கு சொந்தமான காணி களிலும் நிரந்தரமான வீடு வாசல், காணியுடன் புனர்வாழ்வளிக்கப்பட்டு உணவு, உடைகளுடன் வேலை வாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

இவ் அகதிகள் வாழைச்சே னையிலிருந்து கல்முனை ஊடாக வுள்ள பல பங்குகளில் குடியமர்த்தப் பட்டார்கள். இன பேதமின்றி சகலருக்கும் இவ்வன்பு வழங்கப் பட்டது.

தொடர்ந்து வந்த பிரச்சி னைகள் அகதிகளின் தொகையினைக் கூட்டிக்கொண்டே இருந்தது. எகெற் நிறுவனம் மட்டும் இப்பாரிய பொறுப் பினை செயற்படுத்த முடியவில்லை. இதனால் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் துணை தேவைப் பட்டது. 1984ல் ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் நிறுவனங்கள் ஈ.ஆர்.ஓ உடன் இணைந்து கொண்டன. ஆர்.கே.எம் மிஷன், என்.சி.சி, ரோட்டரி கழகம், வை.எம்.எச்.ஏ, வை.எம்.சி.ஏ லயன்ஸ் கழகம், ஐ.சி.ஆர்.சி சர்வோதய முதலான 21 அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து புனர் வாழ்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இந்த ஒன்றிணைந்து செயலாற்றும் ஈ.ஆர்.ஓ அமைப்பின் தலைவராக ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் விளங்குகின்றார்கள்.

தொடர்ந்தும் அவரது எகெட் நிறுவனம் தனிப்பட்ட நிறுவன மாகவும் பணியாற்றி வருகின்றது. திருகோணமலைப் பிரதேசத்திலும் குறிப்பாக மூதூர் பிரதேசத்திலும் எகெற் நிறுவனம் பல்வேறு சமூகப் பணிக ளையும் ஆற்றி வருகின்றது. தற்போது அருள்பணி F. டயஸ் திருமலை எகெற் நிறுவனத்திற்குப் பணிப்பாளராகவும் மட்டக்களப்பு எகெற் நிறுவனத் திற்கு அருள்பணி ஸ்ரீதரன் சில்வெஸ்டர் அவர்கள் பணிப்பாளராகவும் கடமை யாற்றுகிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பலர் அவரோடு இணைந்து செயலாற்ற முன்வந்தார்கள். அப்படிப்பட்டவர்களுள் முக்கியமானவர் காலஞ்சென்ற திரு. ஏ. வேல்முருகு என்பவர். ஆயர் அவர்கள் இம்முயற் சியின் பேரில் சமாதானத்தைக் கொண்டுவர பல்வேறு இடங்களில் சமாதானக் குழுக்களும் உருவாக்கப் பட்டன. இக்குழுக்களின் தலைவர்க ளாகப் பலர் இயங்கினார்கள். குறிப்பாக சட்டத்தரணி சாம்தம்பிமுத்து, காத்தான்குடி ஜனாப் அஹமட் லெப்பை, கல்முனை, திரு வேல்முருகு ஆகியோர் பணியாற்றி னார்கள். அக்கரைப்பற்று பீ.ஏ.முகமட் அவர்களும், தம்பிலுவில் திரு. தருமலிங்கம் அவர்களும் ஆயரோடு இணைந்து சிறப்பாகப் பணியாற்றி னார்கள். திருகோணமலையில் ரோட்டரிக் கழகத்தைச் சேர்ந்த திரு. சோமசேகரம், திரு விஜயநாதன், சட்டத்தரணி இஸ்மாயில் ஆகியோர் சமாதானக் குழுக்களிலும், பிரஜைகள் குழுக்களிலும் இணைந்து பல ஆக்கபூர்வ பணிகளை ஆற்றினார்கள். திருவாளர் தவராஜா ஆசிரியர், பல் மருத்துவ நிபுணர் டாக்டர் பேனாற் மற்றும் அனேகர் பிரஜைகள் குழுக்களில் பணியாற்றினார்கள்.

காலஞ்சென்ற அருள்பணி சந்திரா பெர்னான்டோ அவர்களின் பணியினை ஆயர் அவர்கள் விசேடமாக நினைவு கூர்ந்தார்கள். அவரது அகால மரணம் ஆயிரமாயிரம் ஏழை அகதி மக்களுக்கு ஒரு பேரிழப்பாக அமைந்தது என ஆயர் அவர்கள் வர்ணித்தார்கள்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை ஏற்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் குழுவின் தலைவர் மூர்த்தி ஆசிரியர், ஈஸ்வரன், ஸ்தாபனத் தலைவர் இப்ராஹிம், ஜனாப் சம்சுதீன், திரு. குணனாயகம், திரு. இராசமாணிக்கம் எம்.பி அவர்கள் மருமகனான பொறியியலாளர் ஆகியோர் இணைந்து செயலாற்றினர். மெதடிஸ்த திருச்சபையைச் சார்ந்த போல் நல்லநாயகம் அவர்களின் பணி சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது. இக்குழுவினர் சமாதானத்துக்காகவும், இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தவும் ஆயரோடு இணைந்து அரும் பாடுபட்டனர்.

• தம் பணிகளை விஸ்தரிக்க அவர் காலத்தில் உருவாக்கப்பட்ட கன்னியர் மடங்கள்:

1984ல் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் திருக்குடும்பக் கன்னியர்கள் பணியாற்ற அழைக்கப்பட்டனர். வலதுகுறைந்த பெண்பிள்ளைகளுக்காக இந்நிறுவனம் நிறுவப்பட்டது. பின்னர் திருகோணமலையிலும் வலது குறைந்த பிள்ளைகளிற்காக மற்றொரு ஸ்தாபனத்தை ஆயர் அவர்கள் உருவாக்கினார்.

• அக்கரைப்பற்றில் கார்மேல் கன்னியர் மடம்:

1985 பெப்ரவரி மாதத்தில் அக்கரைப்பற்று கார்மேல் கன்னியர் மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கன்னியர்கள் யுத்தத்தினால் அகதிகளான பிள்ளைகளையும், வறுமைக் கோட்டின் எல்லையிலுள்ள பிள்ளைகளையும் பராமரிக்கின்றனர்.

• சீலோ ஆம் வைத்தியசாலை

நவீன வைத்திய முறைகளுடன் வைத்திய சேவையையும், சுகாதார நலனையும் வழங்குவதற்காக இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பில் வைத்திய நிபுணர்கள் இல்லாத காரணத்தினால் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சேவியர் அவர்களின் துணையுடன் 1991ல் இவ்வைத்தியசாலை அனேகரது முயற்சியின் பயனாகவும் ஆயரின் உறுதுணையுடனும் ஆரம்பிக்கப்பட்டது.



குறைந்த செலவில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று வைத்தியசாலை பிரபல்யம் அடைந்துள்ளது. இன்று அதன் பெயர் சீலோ ஆம்-வின்சன்ட் வைத்திய சாலை. வைத்தியசேவையில் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட திருச்சிலுவைக் கன்னியர்கள் 1991ல் இக்கட்டான யுத்தச் சூழ்நிலையில் தாமாக இவ்வைத்தியசாலையில் பணியாற்ற முன்வந்தனர்.

• திருகோணமலை உப்புவெளியில் வயோதிபர்கள் மடம்: திருக்குடும்பக் கன்னியர்கள் திருகோணமலையில் இப்பணியை ஆற்ற முன்வந்தமைக்குக் காரணம் யாழ் கொழும்புத் துறையில் இயங்கிவந்த வயோதிபர் மடம் யுத்தம் காரணமாக தொடர்ந்து நடாத்தமுடியாமையும் மாங்குளத்தில் அவர்கள் திருமணமாகாத இளந் தாய்மார்களுக்காக நடத்தி வந்த குழந்தை பராமரிப்பு நிறுவனத்தை முற்றாக இழந்தமையும் காரணமாகும்.

இக்கன்னியர்களுடைய வருகைக்கு முன் அருள்பணி லியோ அவர்கள் எகெட் ஸ்தாபனத்தின் மூலம் வயோதிபர்களைப் பராமரிக்கும் முகமாக வாடகை இல்லங்களிலே இதனை நடாத்தி வந்தார்கள்.

• அன்னை திரேசாவின் கன்னியர்கள்

திருகோணமலை லிங்க நகரில் விடைப்பட்ட வயதுசென்ற ஆண் பெண் இருபாலாரையும் பராமரிப்பதற்காக அன்னை திரேசாவின் கன்னியர்கள் ஆயரினால் அழைக்கப்பட்டார்கள். இப்பணிக்காக லிங்க நகரில் மூன்று ஏக்கர் காணி வாங்கப்பட்டது. இக்கன்னியர்களின் மகத்தான சேவையினால் இங்கு அடைக்கலம் புக விரும்புவோரின் எண்ணிக்கை அதிகரித்தது.

மேலும் சமுதாயத்தில் வயது சென்ற பின்னர் தம்மைப் பராமரிக்க யாரும் இல்லாததினால் அருள்பணி அரசரெத்தினம் அவர்கள் பரிபூரணம் என்ற நிறுவனத்தை மட்டக்களப்பு எல்லை வீதியில் ஆரம்பித்தார்கள். அன்னாரின் முயற்சியை ஆயர் அவர்கள் ஊக்குவித்தார்கள். பென்சன் பெறும் இவ்வயோதிபர்கள் ஒரு தொகை பணத்தைச் செலுத்துவதன் மூலம் இவ்வில்லத்தின் பூரணமானதும் சுதந்திரமானதும் அன்புடன் கூடியதுமான சேவையைப் பெறுகின்றனர்.

• ஆயரின் புதிய அப்போஸ்தலிக்கப் பணிகள்

ஆயரின் முக்கிய கவனம் இளைஞர்கள் பற்றியதாகும். இளைஞர்களை பல்வேறு குழுக்களாக உருவாக்கி, அவர்களது ஆளுமைப் பண்பு விருத்தியடைய விசேட பணிப்பாளரை நியமனம் செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து இளைஞர்களுக்கு ஒரு புதிய உத்வேகமளிக்கப்படுகிறது.

• மனிதவள அபிவிருத்தி:

மறைமாவட்டத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தொகுதி ஆளணியினரில் முக்கியமானவர்கள் குருக்களாவர். எல்லாக் குருக்களும் ஒருங்கு சேர்ந்து வருடாந்த ஞான ஒடுக்கம் என்ற ஞான வாழ்வின்பிரதான அம்சத்தில் பங்குகொள்கின்றனர்.

இவ்வாறே மனிதவள அபிவிருத்திக்காக அவர்களது சிந்தனையைத் தூண்டி பணிவாழ்வில் எழுச்சி காணவும் உத்வேகத்துடன் பணியாற்றவும் இளைஞர்களுக்கான கருத்தரங்குகளும் ஏழை மக்களுக்காக உழைக்கும் வின்சன் டி பவுல் இல்லற பணியினருக்கும் கிறிஸ்துதய வாழ்வுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மரியாயின் சேனைப் பணிக்குழுவுக்குமாக கருத்தரங்குகளும் தியானங்களும் அவர்களை வலுவூட்டும் வகையில் மீளமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

• தொடர்பாடல் நடுநிலையம்

முன்னர் தொலைக்காட்சி நாடகங்கள், வானொலி நாடகங்கள், உரைச் சித்திரங்கள் போன்றவற்றை பதிவு செய்ய கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. தற்பொழுது ஆயர் இல்லத்தில் அமைந்திருக்கும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் உதவியினால் இப்பயனை இலகுவில் அடைந்துகொள்ள முடிகிறது.

• புலமைப் பரிசில்கள்

வருடம் ஒன்றுக்கு சுமார் 200 புலமைப் பரிசில்கள் மாணவர்களுக்காக வழங்கப்படுகின்றன.

• கடன் வழங்கும் திட்டம்

எகெட் நிறுவனத்தின் மூலம் வெள்ளம், வறட்சி, யுத்தம், இனக்கலவரம் போன்ற எதிர்பாராத அனர்த்தங்களினால் மக்கள் அல்லலுறும்போது எகெட் ஸ்தாபனம் விரைந்து கை கொடுத்து உதவுகின்றது. கிராமங்கள் தோறும் மீளப் பெறும் கடன் வழங்கும் திட்டமும், மக்கள் சுயமுயற்சி அபிவிருத்தித் திட்டங்களும் உதவுகின்றன.

இதன் மூலம் மக்களது கரங்கள் பலப்படுத்தப்படுகின்றன. சனசு அல்லது சங்கம என்ற நிறுவனத்தின் மூலம் பல்வேறு உதவி நலத்திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன. இந்நிறுவனத்திலே இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் இணைந்து செயலாற்றுகின்றார்கள். இந்நிறுவனத்தின் செயற்குழு அமைப்பில் எல்லா சமயத்தவர்களுக்கும் சிறப்புரிமை உண்டு.

• மூன்றாம் ஆயிரம் ஆண்டின் தொடக்கம்

மூன்றாம் ஆயிரம் ஆண்டின் முக்கிய உந்துகோலாக அமைவது மதங்களுக்கு இடையிலான நேசபான்மையான புரிந்துணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல்களாகும். மட்டக்களப்பு ஆயர் இல்லம் ஆயரின் தலைமையில் இந்தக் கருத்துகளுக்கு வலுவுள்ளதும் பயன்பாடு மிக்கதுமான செயல்திட்டத்தினை அமுல்படுத்தி வருகின்றன.

• ஆயரின் காலத்தில் உருவாக்கப்பட்ட கன்னியர் மடங்கள்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று திருகோணமலை பாலையூற்றில் திருக்குடும்பக் கன்னியர் மடம், திருகோணமலை உப்புவெளியில் திருச்சிலுவைக் கன்னியர் மடம், திருகோணமலையில் அன்னை திரேசா கன்னியர்கள், நிலாவெளியில் கரிட்டாஸ் சகோதரிகள் இல்லம் ஆகியன ஆயரின் முயற்சியினால் புதிய சேவைகளுக்காக நிறுவப்பட்டவை. ஆயரின் இப்பணி பல்வேறு குடியியல் குழுக்கள், குருக்கள், ஏனைய மதப்பிரமுகர்கள் ஆகியோரின் துணையுடன் தொடர்ந்து நடைபெற்றது. இன்றைய இலங்கைச் சூழ்நிலையில் பொருளாதாரச் சூழ்நிலையில் உயர்ந்து நிற்போர் மறுகணம் அவற்றை இழந்து இருண்ட ஓர் எதிர்காலத்தை நோக்குகின்ற வேளையில் ஆயரின் இப்பணிகள் சிறப்பாகப் போற்றப்பட வேண்டியவை. விரக்தியின் எல்லைக் கோட்டிலிருக்கும் மக்களுக்கு இறை அன்பைக் காட்டும் கரங்களாக ஆயர் அவர்கள் மிளிர்ந்துள்ளார்கள்.

• ஆயரின் திருமறை பரப்புப் பணி

கத்தோலிக்க மக்களினதும், சிறுவர்களினதும் திருமறை அறிவினைப் பெருக்க, உள்ளொளி விளக்கி மெய்யான கிறிஸ்தவ வாழ்க்கையை அவர்கள் வாழ்வதற்காக மூன்று மத்திய நிலையங்கள் செயற்படுகின்றன. திருகோணமலை, மட்டக்களப்பில் பிரதான திருமறை நடுநிலையங்கள் மறைபணியாற்றுகின்றன. கல்முனை தெற்கு வரையில் அமைந்துள்ள நிலையங்கள் மறை அறிவுத் தேவையினை நிறைவு செய்ய ஏற்படுத்தப்பட்ட உப மத்திய நிலையங்களாகும். இந்நிலையங்கள் பாடசாலை மாணவர்களுக்கும், பரீட்சைகளை நடாத்தி நாடகங்கள், நாட்டியங்கள் பல்வேறு கலையம்சங்கள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன.

• குழு வாழ்வு சகோதரிகள்: சமூக மறை போதக பணியாளர்களாக குழு வாழ்வுச் சகோதரிகள் முக்கியத்துவம் அளிக்கப் பட்டு பல போதகர்களும் நியமிக்கப் பட்டு பணியாற்றி வருகின்றார்கள். இவையெல்லாம் ஞாயிறு மறைக் கல்விப் போதனைக்கு மேலதிகமாகச் செய்யப்பட்டு வருகின்றது.

ஆயர் அவர்கள் தம் பணியினை வளப்படுத்திக்கொள்வதற்காகப் பங்கு ஆலோசனைச் சபைகளுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். மறைபரப்புப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் தகுதியானவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் தம் பணிகள் சிறக்க அவர்களுக்கு அவரவர் சார்ந்த துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஆயரின் வாழ்க்கை பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. இரு வேறு நிலப்பரப்பைக் கொண்ட மறைமாவட்டம், கஷ்டங்கள் நிறைந்த பிரயாணங்கள். ஆனால் அவர் ஆற்றிய சேவைகளை அவற்றின் பரப்பை இச்சிறு கட்டுரை ஆய்வு செய்யவில்லை என்பது நிதர்சனமானது.

## தவளை மழை

ஐஸ் மழை அமில மழை என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் தவளை மழையைக் கேள்விப்பட்டுள்ளீர்களா? இங்கிலாந்திலுள்ள ட்ரோ பிரிட்ஜ் (DROBRIDG) என்ற பகுதியில் ஒரு முறை தவளை மழை பெய்ததாம். காரணம் இதுதான். சுழன்றடித்த பெருங்காற்று ஆற்றிலும் குளத்திலுமுள்ள தவளைகளையெல்லாம் அள்ளி வீசியதால்தான் அந்தத் தவளை மழை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கிழக்கு நாட்டின் உதயமே வாழ்க!

மட்டுநகர், திருமலை மறைமாவட்டத்தின்
மாண்புமிகு பேராயர் வண பிதாவாம்!
தொட்டபணி துலங்கிடவே சிலுவைதோளில்
சுமந்துமாந்தர் துயர்துடைத்த சுதனின் சேயாம்
கொட்டுகின்ற குண்டுமழை, குமுறும்ஆழி
கோதாரி இனப்பகையால் துவண்டுமக்கள்
பட்டதுயர், படும்துயரை மறைக்கநாளும்
பகலிரவாய்ப் பாடுபடும் பரிதி வாழ்க!

அன்புமுகம் அழகொளிரும் புன்சிரிப்பு!
அனைவரையும் ஆதரிக்கும் அன்புத்தென்றல்
துன்பமெங்கு நேர்ந்தாலும் துடிதுடித்து
துயர்துடைக்க எழுந்தோடும் தூயநெஞ்சன்
தன்னலமே இல்லாத தமிழின் செல்வன்
தருணத்தில் கைகொடுத்துக் காக்கும் தெய்வம்
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை என்றால் உள்ளம்
கர்த்தரை ஸ்தோத்தரித்து வணக்கம் செய்யும்!

இருபத்தைந் தாண்டுகளை நிறைவுகண்ட
இறையாளன் எங்களன்பு ஆயர்வாழ்வின்
இருளகற்றி எங்கள்மனம் தொளிவுகாண
எந்நாளும் உழைக்கின்ற உயர்பண்பாளன்
வருகின்ற நாளெல்லாம் தமிழைப்போல
வாழ்ந்தெமது நலம்காக்க வேண்டுமென்று
உருகிமனம் வேண்டுகிறோம், கிழக்கு நாட்டின்
உதயமே நீங்களென்றும் வாழ்கவாழ்க !

– கவிஞர் செ. குணரத்தினம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் இந்த மாணவ மணி?

தெங்கு சூழ் தன்னாமுனை புனித சூசையப்பர் பாடசாலையில் 1959ம் ஆண்டு ஆணித்திங்கள் எனது ஆசிரியத் தொழிலின் ஆரம்ப நாளன்று பதினாறு மாணவர்களுள் ஒரு மாணவனாக பாலர் வகுப்பில் கண்டேன். இவரது ஆரம்பக் கல்விக்குத் தமிழ் ஆசானாக அ,ஆ எழுதப் படிக்கக் கற்றுக்கொடுத்தேன். அதே காலப்பகுதியில் ஆங்கில ஆசானாக எனது அன்புக் கணவர் அமரர் கந்தப்பொருமாள் மனுவல் அவர்களும் ABCD கற்றுக்கொடுத்தார்கள். மண்பரப்பி விரல் பிடித்து எழுதிப் பழக்கிய நாம் ஏணியாகவே இருக்க உயர்ந்துவிட்டான் உச்சிக்கே, தன்னாமுனை பெற்றெடுத்த தவப்புதல்வன். அன்று நாம் இட்ட வித்து இன்று? இந்த மாணவன் படிப்பில் சுட்டி, விளையாட்டில் மந்தம். வகுப்பில் சக மாணவர்களோடு சல்லாபம் இல்லை. நண்பர்களில்லை. படித்துக்கொண்டேயிருப்பார். அவ்வேளைகளிலெல்லாம் "புத்தகப்பூச்சி" என்று செல்லமாக அழைத்து முதுகைத் தடவிக் கொடுப்பார் என் கணவர். அதுமட்டுமல்ல விளையாட்டு நேரத்தில் சுவரோடு சாய்ந்துகொண்டிருக்கும் இவரை கையில் பிடித்து இழுத்துக்கொண்டு 'மப்பன்' என்று செல்லமாய்க் கூறி அங்கும் இங்குமாய் ஓடுவார்.

தானுண்டு தன் படிப்புண்டு என்ற போக்கிலே மனுவல் சேர் கூறியழைத்தபடியே உண்மையிலேயே புத்தகங்களூடே பூச்சியாகப் புகுந்து கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சுகள் பல பெருக்கி படிப்பிலே பாண்டித்தியன் ஆனான். எம் இருவர் பற்றியும் அறிமுகம் செய்யும் சந்தர்ப்பங்களில் அ,ஆ எழுதப் பழக்கி சொல்லித்தந்தது ரீச்சர், ABCD சொல்லித்தந்து எழுதப் பழக்கிய மனுவல் சேர் என்றும் சொல்வதை எம் செவி குளிர பல தடவைகள் கேட்டிருக்கிறோம். அவர் ஆயராகத் தெரிவு செய்யப்பட்ட செய்தியறிந்து அடுத்த நாட் காலை சந்தித்தபோது சேர் இன்றிருந்தால் சந்தோசப்பட்டிருப்பார். ஜூபிலிக்குக் கூட சேர்தானே தன்னாமுனைக்கு அழைத்துச் சென்றார். என் ஜெபத்தில் அவரை மறப்பதில்லை என்று கூறியபோது மாதா, பிதா, குரு, தெய்வம் என அவர் நினைவு கூரும் நன்றிப் பெருமகனாய்க் கண்டேன். இவரது பிறப்பு, வளர்ப்பு, குடும்பம், இவரது ஆரம்பக் கல்வி முதல் குருமாணவனாய்க் கல்வி கற்றது, பட்டப்படிப்புவரை ஏற்கனவே வெட்டாப்பு பத்திரிகை வெளிச்சமாக்கிற்று. எமது ஆயர் கூட இவரின் சொத்துகள் புத்தகங்கள்தான் என்று அன்றொருநாள் கூறினார்.

உயர்குடியில் பிறந்தார் என்பதனை இம்மாணவனின் நற்பண்புகள், நற்குணங்கள் என்பவற்றினால் அறிய முடிகிறது. சின்ன வயசிலே சுறுசுறுப்பாகப் படிப்பிலே சுட்டியாகச் சுற்றிவந்த இவருக்கு வளர வளர கல்வி கற்கண்டையும் கருப்பஞ்சாற்றையும் விட இனித்தது. "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பதை விட்டு "அலைகடலோடியும் அறிவைத் தேடு" என்று அயல் நாடுகள் சென்று கல்வியைக் கருத்தாய்க் கற்றார். பணம் எம்மை விட்டுப் பறந்து போம், கடைசிவரை துணைநிற்பது கல்வியே எனக் கற்றுணர்ந்தார். இறைபக்தியுடன் கூடிய நேர்மையான உள்ளம் கொண்ட உத்தம மாணவன் என இவை பறைசாற்ற வல்லன.

உலையிலிட்ட இரும்பு செம்பொன்னாவது போல் அறியாமையினாலும், பந்த பாசங்களினாலும், வேற்றுமையுணர்வுகளினாலும் மமதையினாலும் நெஞ்சம் கட்டித்த இரும்பாகாது உருக்கி இளக வைப்பது இறைவன் திருவருளே என உணர்ந்து இறைபக்தியிலும் இடையறா ஜெபத்திலும் நிலைத்திருந்து இறைநம்பிக்கையில் வாழ்ந்த பிரமாணிக்கமுள்ளதொரு மாணவன்.

மட்/மரியாயின் சேனை ஆன்ம இயக்குனராக வழிநடத்திய ஆறு ஆண்டுகாலப்பகுதியிலும், மரியன்னை பற்றியும், சேனையின் கைப்புத்தக விதிகளுக்கேற்ப செபம், சேவை பற்றியும், உறுப்பினர்களை ஊக்குவிக்க, அதிகரிக்கச் செய்ய, சேனை வளர்ச்சி பெற திருவுரை ஆற்றி, அனைவரையும் சேனையில் சேர்த்து, அன்னைக்குப் புகழ் தேட அயராது உழைத்த மரியாயின் மைந்தன். பெற்ற பிள்ளைகள் செய்யவேண்டிய முக்கிய கடமைகளில் ஒன்றென உணர்ந்து மரியாயின் சேனையின் முதியோரை சுற்றுலாக்களுக்கு மடுத்திருப்பதி, திருகோணமலை, யாழ்ப்பாணம், மலைநாடு, மன்னார் என்றெல்லாம் அழைத்துச் சென்று, அங்குள்ள ஆலயங்களெல்லாம் காண்பித்து அன்னையர் தம்மை மகிழ்வித்த தலைமகன். அவ்வேளையில்தான் நேரம் என்றால் நேரம் தான், நேரம் பொன்னிலும் மேலானது என உணர்ந்து செயல்படும் பிள்ளை என்பதை நேரத்திற்குச் சமூகமளிக்காத எத்தனையோ தாய்மாரை விட்டுப் புறப்பட்டுவிடுவதின் மூலம் உணர்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் சம்மந்தமாக இறையியல்பால் ஈர்க்கப்பட்ட இறை அருளினாலும், முன்னோர் வழிகாட்டலினாலும் இன்று இவ்வுயர்வானார். இல்லையேல் எங்கெங்கு என்னென்ன ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது. அனைவரையும் இறைவன்பால் சேர்க்கவேண்டும், விண்ணுலக வாழ்வை அனைவரும் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும், திருச்சபை வளர பொதுநிலையினரை உருவாக்கவேண்டும் என்ற பேரவாக் கொண்டவர். 'முயன்றால் வெற்றி உறுதி' என்பதற்கேற்ப இவர் தம் உள்ளத்தில் கொண்ட இலட்சியங்களை அடைய உறுதியுடன் மேற்கொண்ட முயற்சியே திருவினையாக்கிற்று.

எந்தவொரு சூழ்நிலையிலும் தீமையில் செல்லாது, தன்னிலை தவறாது, உண்மைநிலை நின்று தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்பவரிடத்திற்றான் பெருமை நிலைக்கும் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு. 'மனம் சலனமின்றி உண்மைவழி நடந்து அமைதி பெற்றவர், எந்த அரிய செயலையும் திறமையோடு செய்யும் மனவலிமையுடையோராவர்' என்பதற்கு இவர் ஏனையவர்களுக்கு முன்னேற்றப் பாதையின் முதற்கல். தமது குறிக்கோளை அடையவேண்டும் என்ற பேரவாவும் உத்வேகமும் தன் வாழ்நாளிலேயே இவரைப் பெற வைத்து விட்டது.

பெருமைக்கு, பெரியோர் தொடர்பும், பெரியோர் சென்ற வழிநடத்தலும், அறிவுத்திறனும், ஆன்மீக வளமும், அயரா முயற்சியும் படிக்கல்லென நின்ற நேர்மையால்தான் நினைத்திராத இவ்வுயர்நிலை கிடைத்ததும் அடுத்தநாள் நேரில் சந்தித்து உரையாடியபோது அவரின் மனநிலையில், பேச்சில் பெருமையே கொள்ளாத உள்ளத்தினன் என் மாணவ மகன் என்று நான்தான் பெருமை கொண்டேன். தாங்குவதற்கு அரிதாகிய பாரங்கள், சோதனைகள், துன்பங்கள் நெருங்கி வருத்தும்போது இறை உதவியின் பலத்தில் சிறிதும் தளரவில்லை என்பதற்கு மட்/ மாநகர மத்தியில் நிமிர்ந்து நிற்கிறதே அன்னையின் ஆலயம் போதாதா சான்று பகர! தன்னைச் சிலுவையில் பலியாக்கி உலகமாந்தர் அனைவருக்கும் அடைக்கலமான அந்தத் தேவாதி தேவன் அடைக்கலம் அருள்வான் என்ற இறைநம்பிக்கையில் காலடி பதித்த தனித்துவ மாணவன். தான் வந்த வழிநின்று பிறழாத குணக்குன்று. தன்னிடம் வருவோரை எந்நிலையினராயினும் இன்முகம் காட்டி வரவேற்றுப் பேசி வழியனுப்பும் சிறந்த பண்பாளன். அறிவாற்றலைப் பயன்படுத்தி மென்மையும் பெருந்தன்மையும் கொண்டு இனிமையாகத் தீர்க்கமாகப் பேசி எதிரிகளின் இதயங்களையும் இதமாகத் திறக்கும் திறவுகோல். அடிமனதில் உள்ள நல்லனவற்றை நல்லதென, பிழையெனக் காண்பனவற்றை பிழையென அச்சமின்றி எடுத்துக்காட்டும் பத்திரிகை ஆசிரியர். படித்தவற்றைப் பதித்துப் பிரயோகப்படுத்தி எல்லோரும் தன்னைப்போல் ஆகவேண்டும் என எளிய தமிழில் படித்துப் பயனுற வழி சமைத்த நூலாசிரியர். தன் இறை உறவினர் ஆயர், குருக்கள் அனைவரையும் அன்புசெய்து மதித்துப் பணிவுடன் செவிமடுக்கும் நல்லதொரு சீடனும் நண்பனுமாவார். ஜெபிக்காத மனிதன் வேரில்லாத மரத்திற்கு ஒப்பாவான் என நன்குணர்ந்து தியானத்தில் கண்மூடி ஜெபிக்கும் ஜெபவீரன். கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என இன்றும் பயின்றுகொண்டிருக்கும் கல்லூரி மாணவன். "கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என இறைவனிடத்து தளரா விசுவாசம், இறைநம்பிக்கையோடு அன்றும் இன்றும் கற்றுக்கொண்டிருக்கும் மாணவனாக என் இளவயதில் கண்ட மாணவனை இன்று என் மூப்பிலும் காண்கிறேன். இவர் இன்னும் பல சீருஞ் சிறப்பும், பட்டமும் பதவியும், அருள்வளமும் உடல்நலமும், ஆன்மபலமும் நிறைவுறப் பெற்று பல்லாண்டு வாழ அன்புடை ஆசிரியையாக வாழ்த்தி ஆசி கூறி நிற்கிறேன்.

**- மேரி மனுவல்**
**புளியடிக்குடா பங்கு -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்தார் பெற்ற பேறு



தன் ஜீவனை உள்ளிழுத்துத் தியானித்து
இலையுதிர்காலத்து மரமாய் நின்ற இந்த மண்ணின்
நூற்றாண்டு மௌனத்தை உடைத்தெறிந்தார்
மகா வல்லபம்

எந்தப் பேரூருக்கும் கிட்டாத தரிசனம்
அந்தக் கையளவு மண்ணாம்
தன்னாமுனைக்கென்றே எழுதிவைத்தது

யெருசலேம்களையல்ல
பெத்லகேம்களைத் தேடித்தானே
மீட்புகள் படையெடுத்தன

சின்னக் குடிசைக்குள்தானே
மின்மினிப் பூச்சிகளின் ஒளியில்
மீட்பின் வரலாறு அரங்கேறியது

அந்தச் சின்னஞ்சிறு தன்னாமுனைக்குள்
சூழ்ந்து கிடந்த ஞானத்தை
தோண்டியெடுத்த அந்த அதுதான் எது?
விசுவாசம்

வந்தனைக்குரிய பொன்னையா ஜோசப்
தவத்தார் மட்டுமல்ல
தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்ளும் சத்யமும்
அந்தச் சத்தியத்தினூடாக
எண்ணற்றவைகளுக்குச் சாத்தியமும் அவரே

மனதின் இசைவுகளுக்கேற்ப
சப்தநயங்களைக் கோர்த்து
'ஏக' மென்றும் 'திஸ்ர' மென்றும்
காலப்பிரமாணங்களை வகுக்கும்
இசைஞனும் அவரே

எங்கள் கடினங்களுக்குள்ளும்
தண்ணீரைக் கடத்திவந்த புதிய மோயீசன்,
கவினுறும் வாழ்வியல் கலத்தை
செவ்வியல் மரபுகளால் செலுத்தும் மீகாமன்

மானுட தரிசனத்தில்
அசாத்தியங்களின் முடிச்சுகள்
அவரிடம் அவிழ்ந்துள்ளன

திருப்பலியில் தர்சனப் பிழம்பான தோற்றம்
நிதர்சனச் சக்தியால் பலியின்
உட்பொருளை அவிழ்க்கும் அபாரம்

தூய்மைப் படிவுகளில் காட்சிகளாய் மலர்ந்து
விரியும் ஒருவித சுகானுபவம்

அருளுரைகள்,
மனிதநேயத்தின் நுண்ணுணர்வுத் தளங்களைத் தொடும்
மனித மனதின் சௌகர்ய முடக்கமும்
ஜடவாதமும் தெளிவுறும்
மனோபேதங்கள்
அந்த ஆளுமையின் பட்டறையில் கனலுறும்

வாழ்வியலின் முப்பரிமாணத்தை
அவர் சொல்லிக் கேட்கவேண்டும்

புதிய ஆயரே.
இந்த மண்ணின் கனவுகளை
உங்களுக்கு மகுடமாக்குகிறோம்
அதில் சுகமும் உண்டு
சுமையும் உண்டு

நிவேதித்த கரங்களை அள்ளிக்
கண்ணில் ஒற்றிக்கொள்ள ஆசிக்கிறேன்
சக்கரியாவைப்போல

உங்கள் பெருமையில்
குளிர் காய்ந்து கொள்ள விரும்பும்
இந்த மழைக்குருவியை
உங்கள் நிவேதித்த கரங்களுள்
அடைக்கலமாக்குங்கள்

இனியென்ன.
மனப்பாறைகள் உருகும்
சுடுமணற் திட்டுகள் புஷ்பங்களைச் சொரியும்
பாறையின் மடியிலும் பயிர் விளையும்
உவமைகளும் புதிய வடிவெடுக்கும்

இந்த மண்ணின் புதிய உயிர்ப்பில்
யாவும் இனி நலமே ஆகுக - ஆமென்

– அ. ச. பாய்வா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

மே மாதம் என்றவுடன் எமக்கு ஞாபகம் வருவது மே தினம் என்பதுதான். அத்துடன் இன்னொரு விடயமும் எமது ஞாபகத்தில் இருக்கும். அதுதான் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்களின் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட நாளும் துணையாயர் பேரருட்திரு. பொன்னையா ஜோசப் ஆண்டகையின் ஆயராகத் திருநிலைப்படுத்தலும் ஆகும். அத்துடன் இன்னொரு விடயமும் எம் மனதில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம். முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட மாதமும் மே மாதம்தான். சுமார் முன்னூறு ஆண்டுகள் தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் பட்ட அடிமைத்தனங்களுக்கும், மேற்கொண்ட போராட்டங்களுக்கும் கிடைத்த வெற்றியாய், அவரது 27 வருட சிறை வாழ்க்கைக்கு கிடைத்த பரிசாய் மே 10ம் நாள் (1994) திரு. நெல்சன் மண்டேலா அவர்கள் ஜனாதிபதியாக முடிசூடிக்கொண்டார்.

ஆபிரிக்காவை அடிமைப்படுத்திக்கொண்ட வெள்ளையர்கள், அங்கு வாழ்ந்து வந்த பழங்குடி மக்களை ஊமைகளாய், அடிமைகளாய் ஆக்கி கொடுமைப்படுத்தி வந்தனர். ஆபிரிக்க கறுப்பின மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்கிக் கேவலப்படுத்தினர். அவ்வாறே, நெடுங்காலமாக வசித்துவந்த நிறத்தால் மாறுபட்ட இந்தியர்களையும் நடத்தி வந்தனர். வெள்ளையருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்தது. மற்றையவர்களுக்கு அரசியலில் பங்கில்லை; பேச்சுரிமை இல்லை; கல்வி கற்கச் சுதந்திரம் இல்லை. ஆங்கிலேயர் பயணம் செய்யும் பேருந்துகள், தொடருந்துகள் என்பனவற்றில் மற்றவர்கள் பயணிக்கமுடியாது. இவ்வாறு எண்ணிலடங்கா துன்பங்கள், வேதனைகள் என்பனவற்றில் சிக்கித் தவித்தனர் ஆபிரிக்க மக்கள்.

அக்காலகட்டத்தில் மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் 'நேடால் இந்தியன் காங்கிரஸ்' என்ற அமைப்பை உருவாக்கி இந்தியர் நலன் காக்கப் போராடினார். அவரின் வழியைப் பின்பற்றிக் கறுப்பின மக்களை வெள்ளையர்களின் கொடுமையிலிருந்து விடுவித்து சுதந்திர மக்களாக வாழவைக்கத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்ட மாமனிதர்தான் நெல்சன் மண்டேலா அவர்கள்.


அவரின் சில நடைமுறைகள், அவரின் மீதான மதிப்பினை பல மடங்கு உயர்த்திக் காட்டுகின்றன. தேர்தல் வெற்றியின் பின் அவர் ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறினார் "நான் உங்கள் முன் மகிழ்ச்சி பொங்கும் மனத்துடன் நிற்கின்றேன். இவ்வெற்றிக்கு தனிமனிதர் எவரும் காரணமல்லர். ஆபிரிக்க மக்கள் சமுதாயத்தின் எழுச்சியே காரணம்"

ஆபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்கு வெள்ளை ஜனாதிபதி டி. கிளார்க்கின் மனமாற்றமும் ஒரு காரணமாக இருந்ததென்றாலும் நெல்சன் மண்டேலாவின் தியாக வாழ்வுதான் அவரின் மனமாற்றத்துக்கு ஒரு காரணம் ஆகும். நெல்சன் மண்டேலா அவர்கள் நினைத்திருந்தால் இரண்டாம் தடவையாகவும் பதவியேற்றிருக்கலாம். ஆனால் அவர் பெருமனதுடன் மற்றவர்கட்கு இடம்விட்டு ஒதுங்கிக்கொண்டார். அற்ப சலுகைகளுக்காக விலை போகாத மனிதர் அவர்.

# வெடிக்கும் அணுகுண்டு

சூரியன் இப்பிரபஞ்சத்தில் ஒரு சாதாரண நடுத்தர நட்சத்திரம். செஃபி என்ற நட்சத்திரம் சூரியனைப்போல் 1210 மடங்கு பெரியது. இதனுடைய விட்டம் 160 கோடி கிலோமீட்டர். வுல்ஃப் என்ற நட்சத்திரம் சூரியனுடைய பரிமாணத்தில் ஆயிரத்தில் மூன்று பங்குதான். பூமியை விடவும் சிறியது.

சூரியனுடைய மையப்பகுதியில் வெப்பம் 130 இலட்சம் டிகிரி சென்டிகிரேட். ஒவ்வொரு செகன்டிலும் 40 இலட்சம் டன் ஹைட்ரஜன் அதில் வெடிக்கப்படுகிறது. மனித நாகரீகம் தோன்றி இதுவரையில் பயன்படுத்தியுள்ள சக்தியனைத்தையும் சூரியனால் ஒரே செகன்டில் வெளிப்படுத்த முடிகிறது. ஆயிரம் ஹைட்ரஜன் குண்டுகளுடைய ஆற்றலுடன் சூரியனுடைய மேற்பரப்பிலிருந்து ஹைட்ரஜன் தீ நாக்குகள் பாய்கின்றன. மையப்பகுதியில் ஏற்படும் அணுவெடிப்பே இதற்குக் காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது ஆயரின் சமூகத் தொடர்புப் பணிகளுக்கான பங்களிப்பு



திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருபத்தியைந்து ஆண்டுகளாக அயராது, ஓயாது பணிபுரிந்துவரும் நமது அன்புக்குரிய ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களை மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலைய குடும்பத்தினராகிய நாம் வாயார வாழ்த்துகிறோம் உளமாரப் போற்றுகின்றோம் இதயம் நிறைந்த நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றோம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து திருச்சபையில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. காலத்தின் குறிகளைப் புரிந்துகொண்டு திருச்சபை புதிய சிந்தனையோடும் புதிய அணுகுமுறைகளோடும் இறைபுகழ் பாடவும், நற்செய்தியைப் பறைசாற்றவும் கையாண்ட கைங்கரியங்கள் ஏராளம். அவ்வகையில் நவீன சமூகத் தொடர்பு சாதனங்களின் ஆற்றலையும், அதன் அசுர வளர்ச்சியையும் கவனத்தில் கொண்ட திருச்சபை அவைகளை நற்செய்திப் பணிக்கும் சமூக மேம்பாட்டுக்கும் ஏற்றவிதத்தில் கையாளத் தொடங்கியது.

எமது மறைமாவட்டத்திலும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளுக்கேற்ப புதிய ஆணையங்களும், அலுவலகங்களும் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சமூகத் தொடர்புத் துறைக்கான முதல் இயக்குனராக அருள்தந்தை நோபட் ஒக்கஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அருள்தந்தை ரி. றாகல் அடிகளும் அவரை அடுத்து சி.பி. இராஜேந்திரம் அடிகளும் பணிப்பொறுப்பேற்றனர். இக்காலப்பகுதியில் அதாவது 1983ம் ஆண்டு நமது மறைமாவட்டத்தின் ஆயராக அதிவந்தனைக்குரிய யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டார். புதிய சிந்தனையும், தொலைநோக்குப் பார்வையும், தொடர்பாடல் துறையில் ஆர்வமும் மிக்க அவர் அப்போது தொடர்புத் துறை இயக்குனராக இருந்த அருள்தந்தை ஊ. °. இராஜேந்திரம் அவர்களோடு இணைந்து இதனை மேலும் வளர்த்தெடுக்க முயன்றார். அதன் விளைவாக ஆயரகத்தில் சமூகத் தொடர்பு நிலையத்திற்கு புதிய அலுவலகம் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டது. மேலும் அதனை வளர்த்தெடுக்கும் முயற்சியாக காலத்தின் தேவை கருதி 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி ஒலிப்பதிவு நிலையம் ஒன்றும் ஆயர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆயரகத்தின் பின்புறத்தில் ஒலிப்பதிவு நிலையம் அமைந்துள்ள அக்கட்டிடம் பின்பு முழுமையாகப் புனரமைக்கப்பட்டு தற்போது சமூகத் தொடர்பு நிலையமாக இயங்கிவருகிறது.

மனிதர்கள் இயல்பாகவே தொடர்பாடல் பண்பு மிக்கவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் தத்தமது தேவைகளுக்கேற்ப தொடர்பு கொள்கின்றனர்; தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இவ்வாண்டில் (2008) தனது ஆயர் பணியில் 25 ஆண்டுகளை நிறைத்து வெள்ளிவிழாக்காணும் நமது ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும் தொடர்பாடல் கலையில் வல்லவர். தாம் சொல்ல விரும்புவதை மென்மையாகவும் நாசூக்காகவும் கேட்போர் ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் பக்குவமாகச் சொல்லிவிடுவார். இவரது மேடைப்பேச்சில் கூட ஆரவாரமிருக்காது; ஓங்கி ஒலிக்காது. தாம் சொல்லவேண்டியதை யாருடைய மனதையும் புண்படுத்தாமல் முன்வைத்துவிடுவார். இவ்வாறு தொடர்புத்துறையின் பண்பு நலன்கள் இயல்பாக வாய்க்கப் பெற்றவர் நமது ஆயர் அவர்கள்.

சஞ்சிகைகள், நூல் வெளியீடுகள் போன்றவற்றிற்கு நீண்டகாலமாகவே ஆயர் அவர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பும் உதவிகளும் தொடர்பாடல் துறையில் அன்னாருக்குள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உறுதிப்படுத்துவனவாகும். எந்தவிதமான மொழிச்சார்போ, மதச்சார்போ இன்றி எத்தகைய ஆக்க முயற்சிகளையும் இரசிக்கும் பண்பு கொண்ட அவர் அது தொடர்பான தமது கருத்துகளையும் பக்குவமாகத் தெரிவித்து கலைஞர்களைத் தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும் பண்பாளர். இலங்கையிலுள்ள தமிழ் மறைமாவட்டங்களில் எமது மறைமாவட்டத்திலிருந்தே அதிக அளவிலான குருக்கள் திருவிசைப்பாடல்களைக் கொண்ட இறுவட்டுகளை அதிகளவில் வெளியிட்டுள்ளார்கள். இந்தச் சாதனைகளுக்கு நமது ஆயர் வழங்கிய ஒத்துழைப்பும் உற்சாகமுமே காரணமாகும்.

எந்த விடயமானாலும் அதனை மனிதநேயத்தோடு பார்க்கும், அணுகும் அவரது மனப்பாங்கு அனைவரையும் கவர்ந்த சிறப்பம்சமாகும். அந்த வகையில் எமது சமூகத் தொடர்பு நிலையம் மாதாமாதம் வெளியிடும் சமய சமூக இலக்கிய வெளியீடான தொண்டன் சஞ்சிகையானது தனது 40 ஆண்டுகால வரலாற்றில் பல தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் தாண்டவேண்டி ஏற்பட்டது. அந்த வேளைகளில் எல்லாம் தடைகளைத் தாண்டி தொடர்ந்து வெளிவருவதற்கு ஆயர் அவர்களே பக்க பலமாக இருந்து செயற்பட்டவர். இவ்வேளையில் தொண்டனின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் மிகப்பெரும் பங்களிப்பு நல்கிய எமது மறை மாவட்டத்தின் முன்னாள் துணை ஆயரும், காலஞ்சென்ற முன்னாள் யாழ் ஆயருமான அதிவணக்கத்துக்குரிய வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை

தொடர்ச்சி ...ம் பக்கத்தில்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழிய பல்லாண்டென வாழ்த்துவோம்

ஆயானா யிருபத்தைந் தானதிவ் வாண்டெனப்போம்
தகைசால் ஆண்டகை தமக்காம் அகமொன்றி
நல்லாயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தம்முடைச்
சீர் சொல்லி வாழ்த்துரைப்போம்

ஆன்மீக அறநெறிப் பண்டிதன் மறைப் பணிதொடர
முன்நிலை நின்று முறைமைகள் ஆற்றும் மாண்புடையோன்
தன்னோர்மை நேர்மை பிறர்அன்பு சொரிதிறன் உடையோன்
பன்நலச் சேவைகள் பரிவுடனாற்றும் ஆண்டகையே

மறைப்பணி ஓங்க,ஓயாது தனதுயர் பங்கினைத்தந்து
கறைகாணா அறம்ஓங்க நுண்மதி வாகுசெய்தாரே
குறைதீர்க்க எளியோரை நாடிச்சென்று நலன்புரிந்தவரே
நிறைகுடமாகி நிமலன் பணிசெய் ஆண்டகையே

சமாதானம் சாமரம்வீச சான்றுசொன்ன புரவலனே
கல்வித்தானம் ஓங்கிட வெள்ளிவிழாக்காண் நாயகனே
நிதானம் காத்து உடல்,பொருள்,உழைப் பீந்தவரே
பிரதானம் திருச்சபை எனஉணர்ந்த ஆண்டகையே

எவர்க்கும் இனியவர் ஏற்போர்க்கெல்லாம் எதிர்ப்பிலாதார்
தவிர்க்கும்படி எவர்க்கும் ஏவலிடா இன்முகத்தார்
மதிக்கும்படி செயற் பரிமாறி மகிழ்வுற்றார்
செபிக்கும்படி செயலாற்றத் தூண்டிடும் ஆண்டகையே

வாழிபல் லாண்டென வாழ்த்துவோம் தினம்தினம்
மறைசேவைக் குகந்த மறைஆயராய் என்றும்
கறைஇன்றி காலமெலாம் கடமையாற்றி
முதன்மைப் போதகராய் மேவியேசெயலுற வாழ்த்துகிறோம்
வாழி..... வாழி..... வாழி.....

திருகோணமலை–மட்டக்களப்பு மறைமாவட்ட
கத்தோலிக்க ஆசிரியர்கள் சார்பாக
– வயலற் சந்திரசேகரம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயருள் மகிமை பெற்ற
# பேரருட்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

– க. தங்கேஸ்வரி – (பாராளுமன்ற உறுப்பினர்)

"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு ஆறுதல் தருவேன்" எனக்கூறினார் இயேசுபிரான். அதை நடைமுறையில் செயற்படுத்துபவர் நமது ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை. கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக்கலவரப் பாதிப்புகள், சுனாமிப் பாதிப்புகள், படுவான்கரை மக்கள் வெளியேற்றப்பட்டதில் ஏற்பட்ட பாதிப்புகள் முதலிய ஒவவொரு அனர்த்தத்தின் போதும் அகதிகளை அகதி முகாம்களில் தங்கவைத்து புனருத்தாரண உதவிகளைத் துரித கதியில் ஆயர் மேற்கொண்டு வருவதை அனைவரும் அறிவர்.

இவ்வாறே "உன்னைப்போல உன் அயலானையும் நேசி" என்னும் இயேசுபிரானின் வார்த்தைகளை நடைமுறை வாழ்க்கையில் ஆயர் அவர்கள் மிகவும் தீவிரமாகக் கடைப்பிடித்து வருவதையும் யாவரும் அறிவர். இன மத வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது அனைத்து மக்களையும் தனது உறவினர் போல் கருதி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அவ்வப்போது ஆயர் செய்து வருகிறார்.

இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயம் ஒன்று உண்டு. "இறைவனின் இராச்சியம் உனக்குள்ளேயே இருக்கிறது" எனக் கூறினார் இயேசுபிரான். அதை நன்குணர்ந்தவர் ஆயர் அவர்கள்.

எல்லாச் சமயங்களும் இதையே சொல்கின்றன. ஆனால் அதைக் கவனத்திற் கொள்பவர் ஒரு சிலரே. "உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்" என்பார் திருமூலர். 'உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்பார் சுவாமி விபுலானந்தர். "உள்ளத்தில் உள்ளானடி இறைவன்" என்பார் கவிமணி தேசிக வினாயகம்பிள்ளை. இவற்றை எல்லாம் யார் கவனத்திற் கொள்கிறார்கள்?

அண்மையில் 26.12.2004 சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிவித்தது. ஒரு வீட்டைக் கட்டுவதற்கு ரூபாய் 2.5 இலட்சம் வழங்குவதாகவும் அறிவித்தது. ரூபாய் 2.5 இலட்சத்தில் ஒருவர் எப்படிக் கட்டி முடிக்க முடியும்? மீதித்தொகையை விண்ணப்பதாரர் சேர்த்துக் கட்டவேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்புப்போலும். இது எப்படிச் சாத்தியமாகும்? உள்ளதை எல்லாம் சுனாமியில் இழந்த சோகத்தில் மூழ்கி நிற்கும் ஒருவர், மேலதிக பணம் சேர்த்து எப்படிப் புது வீடு கட்டமுடியும்?

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட ஆயர் EHED நிறுவனத்தின் மூலம் புதிய வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தார். ஒவ்வொரு வீடும் ரூபாய் 8.5 இலட்சம் பெறுமதியானது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேசத்திலும் வீடு கட்டிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட EHED நிறுவனம், மிகத் துரிதமாக இவ்வீடுகளை அமைத்துக் கொடுத்தது. இவ்விடயத்தில் இராமகிருஷ்ண மிஷனும் நல்ல முறையில் வீடுகளை அமைத்துக் கொடுத்தது. அந்த வகையில் இவ்விரு நிறுவனங்களும் கட்டிக்கொடுத்த வீடுகளை முன்மாதிரியாகக் கொள்ளவேண்டும் என சுயேச்சை நிறுவனங்கள் கேட்கப்பட்டுள்ளன. (பல சுயேச்சை நிறுவனங்கள் காணாமற்போனமையும் இங்கு நினைவு கூரத்தக்கது)

நான் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அவ்வப்போது ஆயரை நாடிச்செல்வது வழக்கம். அப்போதெல்லாம் எமது பிரச்சினைகளை அக்கறையுடன் செவிமடுத்து அதற்கான தீர்வுகளை ஆயர் கூறுவார். எப்போதும் மென்மையாகவும் சுருக்கமாகவும் உரையாடுவார். யாராவது உதவி கோரினால் அக்கோரிக்கை நியாயமானதா என்பதை அறிந்து அதற்கான உதவிகளைச் செய்வார்.

மட்டக்களப்பு-திருகோணமலை மறைமாவட்டத்துக்கு அவர் பொறுப்பாக இருப்பதால் அவருக்குள்ள நிர்வாக வேலைகள் ஏராளம். ஓர் அமைச்சுக்குரிய வேலைகள் ஆயரகத்தில் நடைபெறுகின்றன. அவை அனைத்தையும் நன்கு திட்டமிட்டு, முகாமைத்துவக் கோட்பாடுகளின்படி அனைத்து வேலைகளையும் அவர் துரிதமாகச் செய்து முடிப்பது ஆச்சரியம்.

இத்தனைக்கும் மத்தியில் பல்வேறு சமூகப் பணிகளுக்காகவும், கலை, இலக்கியப் பணிகளுக்காகவும் அவரை நாடி வருபவர் பலர். அவர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று, நட்புணர்வுடன் உரையாடி அவர்களது தேவைகளை நிறைவேற்றி வைப்பார் ஆயர்.

நான் மட்/ கச்சேரியில் கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றிபோது, இவ்வாறான பணிகள் பலவற்றுக்கு ஆயரிடம் சென்றுள்ளேன். முடிந்தவரை அவற்றை நிறைவேற்றி எம்மைப் பெருமைப்படுத்துவார் ஆயர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில், மனச்சஞ்சலத்துடன் அவரை நாடிச் சென்றுள்ளேன். அப்போதெல்லாம் அவரது வரவேற்பு அறைக்குள் சென்றதும் ஓர் இனம் புரியாத அமைதி ஏற்படும். அவர் அறைக்குள் வந்ததும் மனச்சஞ்சலங்கள் எல்லாம் பறந்தோடிவிடும். அவர் காலில் விழுந்து வணங்கியதும் எவ்வித கவலைகளும் இல்லாது போய்விடும். சிறிதுநேர உரையாடலின்பின் மிகுந்த உற்சாகத்துடன் அவரது அறையை விட்டு வெளியேறுவேன்.

நான் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டதும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல்வேறு கவலைகள் என்னை வாட்டி வதைத்தன. அரசியல் எனக்குப் புதியது. அரசியல் பற்றி மக்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு சோதனைகள், வேதனைகள் பற்றிப் பலரும் பலவாறாகப் பேசி என்னைக் கலவரப்படுத்தினார்கள்.

நான் ஆயரிடம் சென்றேன். அவர் சொன்னார் "இது இறைவனால் உங்களுக்கு இடப்பட்ட பணி. அதைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு இறைவனே உங்களுக்குத் துணை நிற்பார். அரசியலில் பல்வேறு ஊழல்கள் இருக்கலாம். ஆனால் உங்களைப் போன்று நேர்மையான பாதையில் செல்பவர்களுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாது"

அவர் சொன்னது அத்தனையும் உண்மை. இன்றுவரை எனக்கு ஏற்பட்ட சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் எதிர்நீச்சல் போட்டு எனது கடமைகளைச் செவ்வனே செய்துவருகிறேன். ஒரு தாயின் பரிவுடனும், ஒரு தந்தையின் பாசத்துடனும் ஆயர் அவர்கள் கூறிய ஆறுதல் வார்த்தைகள் இன்றும் என்னை வழிநடத்தி வருகின்றன.

# செபமாலை

## மே மாதம் மாதாவின் வணக்க மாதம்



மூவொரு கடவுள் செபமாலை, அன்னை மரியாவின் ஏழுதுக்க இரகசியச் செபமாலை, திருக்காய செபமாலை, மீட்பரின் முடிச் செபமாலை, பிரான்சிஸ்கன் மகிழ்ச்சி முடிச் செபமாலை, திரு இரத்தத்தின் செபமாலை, தூய பிரிஜித் செபமாலை, தூய சூசை செபமாலை, திரு இருதயச் செபமாலை, திரு இரக்கச் செபமாலை எனப் பலமுடிச் செபமாலைப் பக்தி முயற்சிகள் கத்தோலிக்கத் திருச்சபையின் மன்றாட்டுப் பூர்வீகத்தில் உள்ளன.


செபமாலையை இலத்தீன் மொழியில் ரோசாரியும் என அழைப்பர். 'ரோசா மலர்த் தோட்டம்' என்பதே இதன் பொருளாகும். உச்சாடன மன்றாட்டுகள் எண்ணுவதற்கு வசதியாகப் பல மணிகள், கல்லுகள், முடிச்சுகள் கோர்க்கப்பட்ட மாலையாகக் காணப்படுவதை செபமாலை என அழைப்பர். பொதுவாக செபமாலை என்றால் டொமினிக்கன் செபமாலையை அதாவது மரியாயின் 153 மணிச் செபமாலையைக் குறிக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் அதுவும் திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய செய்தியொன்றை பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி அவர்கள் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் தெரிவித்திருந்தார். ஆம்! தன்னாமுனைப் பங்கினைச் சேர்ந்த அருள்பணி. பொன்னையா ஜோசப் அடிகளார் இனிமேல் அதிவந்தனைக்குரிய கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகை என்றழைக்கப்படுபவராக மாறியுள்ளார். இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபைச் சரித்திரத்தில் கிழக்கு மண்ணைச் சேர்ந்த முதலாவது ஆயரும் இவரே! vdNt , kĶ i w 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' புதிய துணையாயரைச் சந்தித்தோம்.

**வணக்கம்! மதிப்புக்குரிய ஆண்டகையவர்களே, எமது தொண்டன் வாசகர்களுக்காக உங்கள் இளமைப்பருவம் பற்றிச் சற்றுச் சொல்வீர்களா?**

➡ ஆம்! எனது பெயர் பொன்னையா ஜோசப். எனது தகப்பனாரின் பெயர் மத்தேயுஸ் பொன்னையா, தாயாரின் பெயர் மரியபூரணம். நான் 1952ம் ஆண்டு ஐப்பசி மாதம் பன்னிரெண்டாம் திகதி பிறந்தேன். தன்னாமுனை புனித வளனார் பாடசாலையில் 7ம் வகுப்புவரை கற்றேன். அக்காலகட்டத்தில் திரு. ஜோசப் என்பவர் அதிபராக இருந்தார். அக்காலத்தில் திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராக அதிவந். இக்னேசியஸ் கிளனி ஆண்டகை இருந்தார்கள். பின்னர் திருகோணமலை புனித வளனார் கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றுக்கொண்டபின் புனித போல் குருத்துவக் கல்லூரியில் இணைந்து கொண்டேன். பின்னர் இறையியல் கல்வியை புனே (இந்தியா) இறையியல் கல்லூரியில் பெற்றுக்கொண்டேன். தொடர்ந்து 1980ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் திகதி குருப்பட்டம் பெற்றுக்கொண்டேன்.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்டபின் மட்டக்களப்பு மரியாள் இணைப்பேராலயத்தில் இரண்டு வருடங்கள் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றினேன். பின் வாகரை, வீச்சுக்கல்முனை, ஆயித்தியமலை போன்ற பங்குகளில் பங்குத்தந்தையாகக் கடமை புரிந்தேன். 1991ம் ஆண்டு உரோம் நகரிலுள்ள உர்பானியா பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியலில் முதுமாணிப் பட்டம் பெற்றுக்கொண்டேன். அதனையடுத்து 1993ம் ஆண்டு தொடக்கம் 1996ம் ஆண்டு வரை சிறிய குருமட இயக்குனராக (திருப்பெருந்துறை) கடமைபுரியும் வாய்ப்புப் பெற்றேன். 1996ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் கண்டி அம்பிட்டியவில் உள்ள தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகவும், உருவாக்குனராகவும் பணியாற்றினேன். அதனையடுத்து ஐந்து வருடங்கள் தாண்டவன்வெளி வியாகுலமாதா பங்கினில் பணித்தளக் குருவாகக் கடமைபுரிந்தேன். அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வுகளை மேற்கொண்டு நிறைவு செய்தேன். 2006ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் திகதி தொடக்கம் மறைமாவட்டக் குருமுதல்வராகப் பணியாற்றி வருகின்றேன்.

**குருத்துவ அழைத்தலுக்கு உங்களை ஊக்குவித்தது எது?**

➡ தன்னாமுனை, வளனார் ஆலயத்தில் பீடப்பரிசாரகராகப்பணியாற்றும் பழக்கம் பள்ளிப் பருவத்தில் என்னிடத்தில் இருந்தது. அக்காலகட்டத்தில் பங்குத்தந்தையாக காலஞ்சென்ற அருள்பணி நோபட் ஒக்கஸ் அடிகளாரும் உதவிப் பங்குத்தந்தையாக காலஞ்சென்ற அருள்பணி F.X. மேயர் (யே.ச) அடிகளாரும் இருந்தனர். தன்னாமுனைப் பங்கானது வடக்கே வாகரை வரைக்கும் மேற்கே பெரிய புல்லுமலை வரைக்கும் பரவிக் கிடந்தது. குருக்களுடன் சேர்ந்து வாகரை, பனிச்சங்கங்கேணி, புல்லுமலை போன்ற இடங்களுக்கெல்லாம் பூசைக்கு உதவுவதற்காக செல்வதுண்டு. இது நாளடைவில் குருத்துவ வாழ்விற்கு என்னை இழுத்துச் சென்றது.

**குருத்துவ வாழ்வில் நீங்கள் கண்ட மனநிறைவு, சாதனைகள் என்ன?**

➡ 28 வருட இறை ஊழியமே பெரும் மனநிறைவுதான். பல குருக்களை உருவாக்கியுள்ளேன். கல்விப்பணியும் மனநிறைவான சாதனைதான். 2000ம் ஆண்டிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளராக இருக்கின்றேன். இது தவிர மரியாயின்சேனை, இறைஇரக்கம் என்பனவற்றின் ஆன்மீக இயக்குனராகவும் பணிபுரியும் சந்தர்ப்பங்களும் மனநிறைவானவைதான்.

**துணையாயர் பதவியணி ஏன் இங்கு உருவாக்கப்பட்டது? அதன் பின்னணி என்ன?**

திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பரப்பில் மிகப்பெரிய பரந்துபட்ட இடமாகும். அத்துடன் வளர்ச்சியடையும் மறைமாவட்டமும் ஆகும். எனவே ஆயரின் வேண்டுகோளுக்கமைய துணையாயர் பதவியணி உண்டாக்கப்பட்டது. கொழும்பு மறைமாவட்டம், சிலாபம் மறைமாவட்டம் என்பனவற்றிலும் துணையாயர்கள் இருந்துள்ளார்கள். ஏன் திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் முன்னர் அதி.வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையவர்கள் இருந்துள்ளார் அல்லவா?

**இப்படியான பதவிக்கு ஒரு குருவானவர் எப்படித் தெரிவு செய்யப்படுவார்?**

➡ ஒவ்வோராண்டும் ஆயரவர்கள் மூன்று குருக்களின் பெயர்களை சிபார்சு செய்வார். தேவையேற்படும்போது பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதியவர்கள் ஆயர், குருக்கள், பொதுமக்கள் என்போரிடம் கேள்விக்கொத்துகளை அனுப்பி விபரங்கள், அபிப்பிராயங்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வார். அதன்படியும், இறைசித்தப்படியும் இவ்வாறான தெரிவுகள் இடம்பெறும்.

**துணையாயராக உங்கள் பணி என்னவாக இருக்கும்?**

➡ எனது மகுட வாக்கியம் "கிறிஸ்துவின் நறுமணத்தை பரப்புபவராக இருக்க.." என்பதாகும். மறைமாவட்டம் முழுவதும் கிறிஸ்தவ விசுவாசத்தை மேலோங்கச் செய்வதுடன் ஆயரின் பணிகளுக்கு தோள்கொடுப்பதும் எனது பாரிய பணியாக இருக்கும்.

**அண்மைக்காலத்தில் ஒரு சிங்களக் கட்சியொன்று "கத்தோலிக்கக் குருக்கள் பயங்கரவாதத்திற்குத் துணை போகின்றார்கள்" என்ற கருத்துப்பட அறிக்கையொன்றை விடுத்துள்ளதே, அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

➡ அவர்கள் இவ்வாறு வீண்பழி சுமத்திக் கொண்டுதான் இருப்பார்கள். எமது நோக்கம் பல்லின சமுதாய அமைப்புக் கொண்ட இலங்கையில் ஒற்றுமை ஏற்படுத்தவேண்டும் என்பதே! அதேநேரம் அநீதி நடந்தால் பார்த்துக்கொண்டிருக்க இயலாது. என்னைப் பொறுத்தவரையில் அநீதி எங்கு நடந்தாலும் அதற்கெதிராகக் கண்டிப்பாக நான் குரலெழுப்புவேன். அது கிறிஸ்துவின் வழி. பின்னர் என்ன நடக்குமோ என்று எண்ணிப் பயந்துகொண்டிருக்க இயலாது. தமிழருக்கு அநீதி நடந்தால் தட்டிக்கேட்பது பயங்கரவாதத்திற்கு ஆதரவாகாது. எத்தரப்பார் பிழைகள் செய்தாலும் குரலெழுப்ப வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையை பொறுத்தமட்டில் இலங்கை ஆயர் மன்றம், தமிழர் பிரச்சினையை நன்கு புரிந்துகொண்டுள்ளது. சிங்கள ஆயர்கள் தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளைப் புரிந்துள்ளார்கள். ஆயர் மன்றத்தில் சமாதானத்திற்காக குழு என்ற அமைப்பு கூட உள்ளது.

*பல வேலைகளுக்கு மத்தியிலும் எமக்கு நேரத்தை ஒதுக்கித்தந்து, இப்பேட்டியினைத் தந்தமைக்காக துணையாயர் அதி.வந்தனைக்குரிய பொன்னையா ஜோசப் ஆண்டகைக்கு 'தொண்டனின் சில நிமிடங்கள்' சார்பில் நன்றியும் வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டோம்.*

**- ஆழியோன் -**

---

13ம் பக்கத் தொடர்ச்சி...

அவர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைக்கின்றோம். அத்துடன் கலைஞர்களை, இலக்கியவாதிகளை, படைப்பாளிகளை கௌரவிக்கவும், மரியாதை செலுத்தவும், புகழ்ந்து பாராட்டவும் நமது ஆயர் தவறியதில்லை.

1983ம் ஆண்டுவரை கொழும்பிலிருந்தே கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பாகி வந்தன. இதனைப் புதிய உலகம் என்ற பெயரில் 1975ம் ஆண்டு முதல் கரவையூர்ச் செல்வம் என்றழைக்கப்படும் எஸ். எம். செல்வரெட்ணம் அ.ம.தி. அடிகளாரும், அவரைத் தொடர்ந்து 1979ம் ஆண்டிலிருந்து மலர்வேந்தன் என்று அழைக்கப்படும் எஸ். எஸ். யேசுதாஸ் அவர்களும் தயாரித்து வழங்கி வருகின்றனர். 1983ம் ஆண்டு ஏற்பட்ட ஜூலைக் கலவரத்தைத் தொடர்ந்து திரு. மலர்வேந்தன் அவர்கள் தமது பிறந்த இடமான மட்டக்களப்புக்கு வரவேண்டி நேர்ந்தது. இதனைக் கண்ணோக்கிய நமது ஆயர் அவர்கள் பல கலைகள் அறிந்த சிறந்த கலைஞரான மலர்வேந்தன் அவர்களை அழைத்து மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தில் பணிபுரிய வாய்ப்பையும் கொடுத்து, இங்கிருந்தே கத்தோலிக்க நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும் பதிவு செய்யவும் கூடிய வசதிகளையும் மிக விரைவாக ஏற்படுத்திக் கொடுத்தார்.

நமது நாட்டு மக்கள் இனக்கலவரங்களாலும், போர்ச் சூழல்களாலும் பல்வேறு அழிவுகளுக்கும் சீர்கேடுகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். அதுவும் குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள் பெரும்பான்மை இனத்தவராலும் ஆயுதக்குழுக்களாலும் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இத்தகைய நெருக்கடி மிக்க ஒரு காலகட்டத்தில் எமது கிழக்கு மண்ணின் ஆயராகப் பணியாற்றிவரும் நமது ஆயர் அவர்களின் பணியும் நெருக்கடி மிக்கதாகவும் சவால் நிறைந்ததாகவுமே இருந்து வருகிறது. ஆயினும் தமது இறைவிசுவாச பலத்தினாலும், தன்னம்பிக்கையினாலும், இராஜதந்திர செயற்பாடுகளினாலும் அனைத்தையும் எதிர்கொண்டு, உண்மையை உரைத்து, உரிமைக்குக் குரல் கொடுத்து அதில் வெற்றியும் கண்டு வருகின்றார். இவ்வாறு பல பொறுப்பு வாய்ந்த பணிகளுக்கு மத்தியிலும் எமது நிலையத்தின் வளர்ச்சிக்காகப் பெரும் பங்களிப்பை நல்கி வருகின்றவராக ஆயர் விளங்குகிறார் என்பது விதந்து போற்றுதற்குரியதாகும். தமது ஆயர் பணியிலே வெள்ளி விழாக்காணும் நமது ஆயர் அவர்களை நெஞ்சார வாழ்த்துகிறோம், நீடூழி வாழவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

– அருள்தந்தை றொஹான் பேனாட் –
இயக்குனர்,
சமூகத் தொடர்புகள் நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## சாந்தி ஆசனம்

(சவாசனம்)



1. விரிப்பின் மீது இரண்டு கால்களையும் நீட்டி அமரவும்.
2. கைகளின் உதவியுடன் முதுகைத் தரையில் வைத்துப் படுக்கவும்.
3. முகம் வானத்தை நோக்கியபடி இருக்க வேண்டும்.
4. கால்களை இரண்டு அடி விரித்து வைக்கலாம். உள்ளங்கைகள் வானத்தைப் பார்த்தபடி உடலின் பக்கவாட்டில் ஓர் அடி இடைவெளியில் இருக்க வேண்டும்.
5. எல்லா உறுப்புகளையும் ஆட்டாமல், அசைக்காமல் அப்படியே ஓய்வாகப் படுக்கவைக்க வேண்டும்.
6. ஆழ்ந்த சுவாசத்தை ஐந்து தடவை எடுத்து விடவும்.
7. கால் முதல் தலை உச்சிவரை எல்லா உறுப்புகளும் எல்லா உறுப்புகளும் ஒய்வுபெற மனதை அந்தந்த உறுப்புகளில் வரிசையாக நிறுத்த வேண்டும்.
8. தளர்ந்த நிலையிலேயே கண்களை மூடி தூங்கி விடாமல் மூன்று நிமிடம் மூக்கின் நுனியில் அல்லது சுவாசத்தில் கவனத்தை வைத்திருக்கவும்.
9. அவசரப்படாமல் மெதுவாகக் கை, கால்களை அசைத்துக்கொள்ள வேண்டும். மூன்று தடவை ஓம்... ஓம்... ஓம்... என்று சொல்லி அதன் பின்னர் முறைப்படி எழும்பவேண்டும்.
10. இரு உள்ளங்கைகளையும், கண்களின்மேல் இலேசாக நோகாமல் வைத்து விழிக்கவும்.
11. சிறிது நிமிட அமர்வுக்குப்பின் அவ்விடத்தை விட்டு நகரவேண்டும்.

## கவனிக்கவும்

ஒவ்வாரு உறுப்பாகத் தளர்த்த வேண்டும். உதாரணமாக வலதுகால் பெருவிரலைத் தளர்த்தும்போது இவ்வாறு செய்யலாம்.

1. விரலை நினைப்பது.
2. விரல் தளர்வதைக் கவனிப்பது.
3. விரல் தளர்ந்துவிட்டதை உணர்வது.

இவ்வாறு செய்தபின் ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி என்று மூன்று தடவை மனதிற்குள் சொல்லி இன்னும் கூடுதலான சாந்தியைப் பெறலாம். இவ்வாறு ஒவ்வொரு உறுப்பாகத் தளர்த்தி அமைதியும் ஆனந்தமும் பெறுங்கள்.

## சாந்தியாசனம் செய்வதால் ஏற்படும் நன்மைகள்

1. மன இறுக்கத்தைப் போக்குகின்றது.
2. இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றது.
3. உடலையும், உள்ளத்தையும் அமைதிப்படுத்துகின்றது.
4. அனைத்து நரம்புகள், நாடிகள், எல்லாவற்றிலும் சுத்த இரத்தமும், மின்காந்த ஓட்டமும் பாய்கிறது.
5. மனதில் கோபம், படபடப்பு, உடல் நடுக்கம், மயக்கம், தெளிவற்ற சிந்தனை போன்றவற்றைப் போக்குகின்றது.
6. கண் எரிச்சலைப் போக்குகின்றது.
7. உடல் முழுவதையும் உறுதிப்படுத்தி ஊக்கமளிக்கின்றது. அத்துடன் எல்லாத் தசைகளும், மூட்டுகளும் தளர்த்தப்படுகின்றன.
8. மன நெருக்கீடுகளினால் ஏற்படும் மனநோய்ப் பிரச்சினைகளுக்குப் பலனளிக்கிறது.
9. ஆளுமைப் பண்பு மிளிர்கிறது.
10. மனதின் சக்தி கூடி மனம் ஒருநிலைப்படும்.

## குறிப்புகள்

1. எல்லா ஆசனங்களும் அல்லது ஒருசில ஆசனங்கள் செய்தபின் கண்டிப்பாக இவ்வாசனத்தைச் செய்யவேண்டும்.
2. ஆசனம் முடியும்வரை கண்கள், வாய் மூடியிருக்கவேண்டும்.
3. மூச்சை அவதிப்படாமல் அமைதியாக ஒரே சீராக எடுத்துவிடவேண்டும்.
4. முள்ளந்தண்டு, விரிப்பின்மீது நன்றாக படிந்து இருக்கவேண்டும்.
5. உடல் உறுப்புகள் அனைத்தையும் தளர்த்தி வைக்கவேண்டும். எந்தப் பிடிப்பும் அழுத்தமும் இருக்கக் கூடாது.
5. மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar
(India)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றிருந்தது போலவே இன்றும்

**1965**ம் வருடம் புனித பிரான்சிஸ்கன் சபைக் கன்னியருடன் மடுத்திருப்பதியிலே தங்கியிருந்தேன். அவ்வேளையில் அங்கு கண்ணுக்கெட்டிய தூரத்தில் அங்குமிங்குமாக ஒருசில வீடுகளே காணப்பட்டன. எப்பக்கம் பார்த்தாலும் காடுதான். இவற்றின் மத்தியிலே மடுமாதாவின் அழகிய ஆலயம் அமைந்திருந்தது. ஆலயத்திற்கருகாமையில் ஒரு சிறு கன்னியர் இல்லம். அங்கு என்னுடன் இன்னும் நான்கு பெண்களும் தங்கியிருந்து, அருட்சகோதரிகளின் பணியில் இணைந்து செயற்பட்டோம். இந்தவேளையில்தான் இப்போது தமது ஆயர் பணிவாழ்வில் 25 வருடங்களை நிறைவேற்றிச் சிறப்பிக்கும் அதிவந்தனைக்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையவர்கள் அவ்விடத்திற்குக் குருவாக வந்து சேர்ந்தார்.

இவருடன் பணிபுரியும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது. இன்று காணும் அதே புன்னகை தவழும் முகம், மெலிந்த உருவம். நாங்கள் மூன்று பெண்களும் இரு கன்னியருமாக ஐந்து பேர் நேரிய குளம், முதலியா குளம், செட்டிக்குளம், முருங்கன், சின்னப்பன்றிவிரிச்சான் ஆகிய இடங்களுக்குப் பணிபுரியச் செல்லவேண்டியிருந்தது. அருள்தந்தை தமது ஜீப் வண்டியில் ஏற்றிச் செல்வார்.

அங்கு நாம் தையல் வேலை, பின்னல் வேலை இவைகளைக் கற்பித்தும், வீடுகளைத் தரிசித்தும், சமயம் கற்பித்தும் வந்தோம். அத்துடன் அன்னையின் திருப்பதியைச் சுத்தம் செய்வது, அலங்கரிப்பது ஆகியவற்றையும் செய்து வந்தோம். அனைத்திற்கும் அருள்தந்தை எமக்குப் பெரும் உதவியாக இருந்தார். கடுமையாகப் பேசுவதையோ, கோபத்தையோ அவர் முகத்தில் கண்டது கிடையாது. எப்பொழுதும் அமைதியாகவும், அன்பாகவும் கதைப்பார். கோயில் வேலைகளைக் கவனிப்பதற்கென சில இளைஞர்களும் இருந்தனர். இவர்கள் தச்சுவேலை, மெக்கானிக் வேலை, ஆகியவற்றிலீடுபட்டனர். எல்லோரோடும் அன்பாகப் பழகி வெற்றிகரமாக வேலைகளைச் செய்து முடிப்பார்.

1968ம் ஆண்டு என நினைக்கிறேன். அருள் தந்தை செட்டிக்குளப் பங்குத் தந்தையானார். அப்பொழுது என்னால் மறக்க முடியாத ஒரு சம்பவம். ஒரு முறை நான் விடுமுறைக்காக ராகலைக்கு வீட்டிற்குச் சென்றுவிட்டு மடுவை நோக்கி புறப்பட்டு வந்தேன். கண்டியில் பஸ் தாமதமாகப் புறப்பட்டதால், அனுராதபுர பஸ் நிலையத்தை அடைகையில் மாலை 4.00 மணி. எல்லா இடங்களிலும் 'கள்வர் கவனம்' என எழுதப்பட்டிருந்தது. பயத்துடன் நின்றிருந்த வேளையில், நடுத்தர வயதுடைய ஒருவர் என்னிடம் வந்து "நீங்கள் இதற்குப் பிறகு மடுக்கோயிலுக்குப் போகமுடியாது, எனக்கும் உங்களைப் போல் பெண் பிள்ளைகளிருக்கின்றார்கள். வந்து தங்கிவிட்டு நாளைக்குப் போகலாம்" என்றார். பார்த்தேன், நிலமை சிக்கல். அந்நேரம் பார்த்து 'மடுறோட்' என்ற பலகையுடன் ஒரு பஸ் வர, அதிலேறிக்கொண்டேன். எனக்கு ஒரு நம்பிக்கை, அருள்தந்தை அவர்கள் செட்டிக்குளத்தில் இருப்பார், எத்தனை மணியானாலும் அங்கு இறங்கிக் கொள்ளலாம் என்று. ஏழரை மணிக்கு பஸ் செட்டிக்குளத்தை அடைந்தது.

# வத்திக்கானில் நடைபெறவுள்ள உலக ஆயர் மன்றம்

கத்தோலிக்கத் திருச்சபையில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை உலக ஆயர் மன்றம் நடைபெறுகிறது. வருகின்ற ஒக்டோபர் ஐந்துமுதல் 26ம் திகதிவரை வத்திக்கானில் நடைபெறவுள்ள இறைவார்த்தை பற்றிய உலக ஆயர் மன்றம் இறைவார்த்தையை மேலும் மேலும் அறிவதற்கு உதவும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. 12ம் உலக ஆயர் மன்றத்தின் தயாரிப்புகள் பற்றி உரோம் லாத்தரன் பல்கலைக்கழகத்தில் பேசியபோது பேராயர் நிக்கோலா எத்தேரோவிச் இதனைத் தெரிவித்தார்.

இந்த உலக ஆயர் மன்றத்தின் கருப்பொருள் பற்றி 152 நிறுவனங்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டன. அவற்றில் 99 நிறுவனங்கள் 20 கருப்பொருள்களைப் பரிந்துரை செய்திருந்தன. அவற்றில் 19 இறைவார்த்தையை மையப்படுத்தி இருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பஸ்ஸிலிருந்து இறங்கி அவர் பணிபுரிந்த ஆலயத்திற்கே சென்றுவிட்டேன். அங்கு நின்ற தந்தையவர்கள் என்னைக் கண்டதும், ஆச்சரியத்துடன் "என்ன திரேசா இந்நேரத்தில்" என்று வினவினார். நான் நடந்ததைக் கூறியதும், எவ்வித தயக்கமும் இன்றி வாங்க, என்று அன்போடழைத்து "கை, கால், முகம் கழுவிவிட்டு வந்து சாப்பிடுங்கள்" என்று கூறிவிட்டு, அந்த சிறு இடைவேளையில் பக்கத்திலிருந்த அருளம்மா எனும் ஆசிரியைக்கு அறிவிப்புக் கொடுத்து, அவர்கள் வீட்டில் தங்கவைத்து, விடிந்ததும் "நானே மடுவுக்கு கொண்டு சென்றுவிடுகிறேன்" எனக் கூறி அவ்வாறே செய்தார். இந்த உதவியை இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை.

இவ்வாறு எமது சேவை வாழ்வும் தொடர்ந்தது. நாங்கள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் சில ஆண்டுகள் பணிபுரிந்தோம். இந்த வேளையில்தான் 1969ல் புனித பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர், திருக்குடும்பச் சபைக் கன்னியரிடம் இல்லத்தை ஒப்படைத்துப் புறப்படவேண்டி நேரிட்டது. அமைதியான மகிழ்ச்சி நிறைந்த அன்னையின் திருப்பதி, ஆயிரக்கணக்கான அன்புள்ளம் கொண்ட மக்கள் இவர்களையெல்லாம் விட்டுப் பிரிந்து வரும் வழியில் செட்டிக்குளம் சென்று அருட்தந்தையிடம் கூறிவிட்டு வரச்சென்றோம். அங்கு அவர் சுகயீனமுற்ற நிலையில் இருந்தார். விடைபெற்று வேதனையோடு கொழும்பு நகர் வந்தடைந்தோம்.

அடுத்த வருடம் அதாவது 1972ம் வருடம் மட்டு நகருக்கு வந்து மீண்டும் புனித பிரான்சிஸ்கன் சபைக் கன்னியர் இல்லத்தில் எனது வாழ்வைத் தொடர்ந்தேன். அன்று நான் கண்ட அருட்தந்தை ஆயராகி 1983ம் வருடம் மட்டு நகருக்கு வருகிறார் எனும் செய்தி எனக்குப் பெரும் மகிழ்வைத் தந்தது. என்னுடன்ஒன்றாகப் பணிபுரிந்த எவரும் இன்று இங்கு இல்லை. சிலர் இடம் மாறியும் சிலர் இறந்தும் போயினர். ஆனால் ஒரு விஷேடம் என்னவென்றால், ஆயர் இன்னும் எவரையும் மறக்கவில்லை. என்னிடம் அவர்களைப் பற்றி விசாரிப்பார். இவ்விதமாக 40 வருடங்களுக்கு முன் தன்னோடு பழகிய எவரையும் மறக்காமலிருப்பது விசேட அம்ச மாகும்.

அடிக்கடி அவரை நான் சந்திப்பதுண்டு. "எப்பிரச்சினைகள் வந்தாலும் எதிலும் தளர்ந்து போய்விடக்கூடாது" என அறிவுரை கூறுவார். அன்று கண்ட அதே உருவம் மட்டுமல்ல வயது போனாலும் உள்ளத்திலும் அன்றுபோல் இன்றுமுள்ளார். எமது ஆயர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இறைபணி புரிந்து பல விழாக்களைச் சந்திக்கவேண்டுமென இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் வாழ்த்துவதோடு, அவருக்கு ஆன்ம, சரீர நன்மைகளை நிறைவாகப் பொழிந்தருளவும் வேண்டுமென்று இறைவனை வேண்டுகின்றேன்.

– செல்வி. திரேசா இன்னாசிமுத்து –
புளியடிக்குடாப் பங்கு

## 'ஃபெம்டோ செகன்ட்' தெரியுமா?

ஒரு நொடியின் கோடியின் ஒரு பகுதியின் இலட்சத்தில் ஒரு பகுதியை ஃபெம்டோ செகன்ட் என்று அழைப்பர். ஒரு நொடிக்கும் 32 இலட்சம் வருடங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளதோ அதே அளவு ஒரு ஃபெம்டோ செகன்டுக்கும் ஒரு நொடிக்குமிடையே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துயர் துடைக்கும் பணியில்

# பல்சமய சமாதான ஒன்றியம்



உலகிலே இறைவனால் படைக்கப்பட்ட ஜீவராசிகளில் மனித இனம் மட்டும்தான், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துடன் ஒன்றாகும் நிலையினைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இந்நிலையை உருவாக்கிக் கொடுப்பது மதங்களே என்றால் அதை மறுக்க முடியாது. அம்மதத்தை வழிநடத்துவோர் நான்தான் மதம் எனத் தம்மை மாற்றி தமது ஆசாபாசங்களுக்கு ஏற்ப பல அழிவுகளை மதத்தின் பெயரால் உண்டுபண்ணி வந்துள்ளனர். மதத்தின் பெயரால் மனிதர்களுக்கிடையே முரண்பாடுகள், இனங்களுக்கிடையே முரண்பாடுகள், நாடுகளுக்கிடையே முரண்பாடுகள் என பெரும் அழிவுகளை மதங்கள் உருவாக்கியுள்ளதை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது.

இன்று மக்கள் மத்தியில் அமைதி இல்லாது, சந்தோசமில்லாது துன்பப்படுவதற்கு மதங்களும் ஒரு காரணமாகவுள்ளன. மத அடிப்படையில் இன ஒற்றுமை ஏற்பட்டால் நாட்டில் சமாதானம் நிலவுவது மட்டுமல்ல உலகமே சமாதானப் பூங்காவாக விளங்கும் என்பது உறுதி. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற மனிதநேயக் கொள்கையில் ஒன்றுபட்டால் பூலோகமே ஒரு தெய்வீக உலகமாக விளங்கும் என்பது உண்மை. இதனை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு மக்கள் மதவேறுபாடுகளுக்கு அப்பால் மனிதநேயத்தில் ஒன்றுபடவேண்டும் என்ற நோக்கத்தில் சர்வமத சமாதான ஒன்றியத்தை அமைக்க அதிவணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் பாடுபட்டார். அவரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட பல்சமய சமாதான ஒன்றியம் ஐந்தாண்டுகளைக் கடந்து சேவையாற்றி வருகின்றது.

சுனாமிப் பேரழிவின் பின் பாதிக்கப்பட்ட பெருந்தொகையான மக்களின் குறைபாடுகள் முழுமையாக நிறைவேற்றப்படாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையினையும் அவர்களுக்குள்ள தவிப்பினையும் உணர்ந்த மட்டு, திருமலை ஆயர் அவர்கள் மற்றைய சமயத் தலைவர்களின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட மக்கள் பணிமன்றத்தை அமைத்தார். இம்மன்றம் சர்வமத சமாதான ஒன்றியத்தின் அனுசரணையுடனே இயங்குகின்றது. இதன் பெரும் தலைவராக அதிவணக்கத்துக்குரிய ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பணியாற்றி வருகின்றார்.

சுனாமியின்போது முற்றாக அழிபட்ட வீடுகள், பகுதி சேத வீடகள், தொழில் பாதிப்பு என்பனவற்றிற்கு எம்மிடம் வந்து முறையிட்டனர். அவர்களுக்கு அரசாங்கம் மூலமும், நிறுவனங்கள் மூலமும் உதவிகளைப் பெற்றுச் செய்து வந்துள்ளோம். அதுமட்டுமல்ல சுனாமியினால் இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழ், காணி உறுதி வரைபடங்கள், அடையாள அட்டை தொலைந்தோருக்கு உடன் நடவடிக்கை எடுத்து அதனைப் பெற்றுக்கொடுக்க உதவிகள் செய்துள்ளோம். "அமெரிக்கெயார்" "டயகோனி" உதவித் திட்டங்களின் மூலம் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் வாய்ப்புகளை அமைத்துக் கொடுத்துள்ளோம்.

சிறப்பாக சுனாமியின்போது வாடகை வீட்டில் குடியிருந்தோரின் உடமைகளும், உயிர்களும் அழிந்துள்ளன. ஆனால் அவர்களுக்கு அரசாங்கமோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களோ வசிப்பிட உதவிகள் செய்யவில்லை. இவர்களில் அனேகமானவர்கள் பல வன்செயல்களில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்தவர்கள். அவர்கள் இப்பாதிப்பின் பின் வாழ்வதற்கே வெறுப்படைந்த நிலையில் இருந்தனர். இவர்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் செயற்பாட்டினை எமது மன்றத்தின் பெருந்தலைவர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் அனுசரணையுடன் மயிலம்பாவெளியில் 10 ஏக்கர் காணியைக் கொள்வனவு செய்து மாதிரிக்கிராமம் அமைக்கும் திட்டத்தை வகுத்தோம். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தரமான முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. வீதிகள், பாடசாலை, வாசிகசாலை உட்பட பல பொது நிறுவனங்களும் இடம்பெறவுள்ளன. இதனை "எகெட், கரிற்றாஸ்" சிறந்த முறையில் அமைத்து வருகின்றது.

கல்வித்துறையில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றோம். தாயினையோ, தந்தையினையோ இழந்து படிக்க வசதியில்லாத G.C.E (A/L) பிள்ளைகளுக்கு படிப்பதற்கு வெளிநாட்டினரின் உதவியைப் பெற்று மாதாமாதம் ஆயிரக்கணக்காக உதவி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றோம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடுதுணி வசதியில்லாதோர், உணவு வசதியில்லாதோருக்கு அந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம்.

கிழக்குப் பல்கலைக்கழகம் உபவேந்தர் உயர்திரு. இரவீந்திரநாத் கடத்தப்பட்டிருந்த பொழுது திரும்பப் பல்கலைக்கழகம் தொடங்க முடியாது இயக்கங்களுக்கிடையே முரண்பாடுகள் நிலவியபோது சர்வமத சமாதான ஒன்றியம் அதில் தலையிட்டு சம்மந்தப்பட்டவர்களுக்கு இடையேயுள்ள முரண்பாடுகளைப் போக்கி பல்கலைக்கழகம் வழமைபோல் நடைபெற உதவியது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லீம் இனங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை ஏற்படுத்த பல செயற்பாடுகள் செய்து வருகின்றோம். எடுத்துக்காட்டாக சர்வமத பிரார்த்தனை காத்தான்குடி மெத்தைப் பள்ளிவாசலில் நடத்தினோம். இலங்கை வரலாற்றில் மற்றைய மதங்கள் ஒன்றுபட்டு பள்ளிவாசலில் கூட்டுப்பிரார்த்தனை நடாத்தியது இதுவே முதற்தடவை என்று பலராலும் பாராட்டப்பட்டது.

எவ்வகையில் மக்களை மனிதநேய அடிப்படையில் ஒன்றுபடுத்தி ஓர் இனம்போல் செயலாற்றவேண்டும் என்பதே பல்சமய சமாதான ஒன்றியத்தின் முழுமையான நோக்கமாகும். அதனையே மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்த பாடுபட்டு வருகின்றது. சர்வமத சமாதான ஒன்றியத்தின் செயற்பாட்டினை வெளிமாவட்டத்தினரும் முன்மாதிரி கையாகக் கொண்டு செயலாற்றி முயற்சி செய்கின்றனர். இத்தகைய செயற்பாட்டுக்கு ஆணிவேர் மட்டு, திருமலை ஆயர் அவர்களே என்பது உண்மை.

**"இன்பமே சூழ்க, எல்லோருமே வாழ்க"**

க.கணேசு B.A (Cey) J.P (Whole Ilands)
செயலாளர் நாயகம்,
பல்சமய சமாதான ஒன்றியம்,
பாதிக்கப்பட்ட மக்கள் பணிமன்றம்.

# கடுகுக் கதை 4 — கல் சொல்லும் கதை

- பர்ரி



கருங்கல் 'லொறி' ஒன்றிலிருந்து வழுந்த பெரிய கல்லொன்று மூன்று நாட்களாக வீதியை இடைஞ்சல்படுத்திக்கொண்டு அப்படியே கிடந்தது; எவரும்அதனை அப்புறப்படுத்தவில்லை. எனக்குப் பெரிய சங்கடமாக இருந்தது. நானாவது அதனை அப்புறப்படுத்தலாம்தானே!

சிறுவயதில் அம்மம்மா சொன்ன கதை ஞாபகம் வந்தது. இப்படித்தான் அம்மம்மாவின் கதையிலும் பாதையில் கல் கிடந்தது. அதை அகற்றிய சிறுவனுக்கு கல்லின் கீழ் மறைத்து வைக்கப்பட்ட பரிசு, வெகுமதியாகக் கிடைத்தது. அக்கதை என் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டிருந்தது. பதினாறு வயதான எனக்கு கல்லை அகற்றிப் பரிசு பெறவேண்டும் என்ற எண்ணமெல்லாம் இல்லை. யாராவது பகிடி பண்ணுவார்களோ என்ற எண்ணம்தான் தடை.

பரவாயில்லை அதை எப்படியாவது அகற்றவேண்டும். நானே இரண்டு மூன்று தடவை சைக்கிளில் செல்லும்போது மோதப் பார்த்திருக்கிறேன். அக்கல்லை அகற்றத் துணிந்தவனாய் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தேன். கண்ணுக்கெட்டிய தூரத்தில் கல் தெரிந்தது.

அப்போது ஒருவர், கடும் மதுபோதையுடன் கல்லுக்குக் கிட்ட வந்து கெட்ட வார்த்தைகளால் கல்லையும், கல்லைப் போட்டவனையும் திட்டிக்கொண்டு கல்லைப் புரட்டினார். அந்தோ! பெரும் வெடியோசையுடன் கல் வெடித்துச் சிதறியது; அம்மனிதனும் துண்டுதுண்டாகிப்போனார். நான் விக்கித்து நடுங்கிப் போனேன்.

இப்போது அம்மம்மா உயிருடன் இருந்திருந்தால் என்ன சொல்லியிருப்பாவோ தெரியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயேசுநாதர்

இயேசுவைக் குறித்து பவுல் குறிப்பிடுகையில் அவருடைய தாழ்ச்சி பற்றியும், படைப்பினில் அவருடைய மேன்மை பற்றியும், அவரது இரண்டாம் வருகை பற்றியும் மிக ஆழமாகவும், கருத்துச் செறிவுடனும் கூறுகிறார்.

இயேசுவின் தாழ்ச்சி பற்றிக் கூறும் பவுல் அவர் இராவுணவு வேளையில் தம் சீடர்களின் கால்களைக் கழுவிய நிகழ்விலே இதன் உச்சகட்டத்தினை விளக்குகிறார். யூத முறையின்படி ஓர் அடிமை செய்யும் வேலையினை நமதாண்டவர் இயேசு செய்து, பிறர் மட்டில் நாமும் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும் எனும் தனது போதனையினை செயலிலே காட்டி, மனத்தாழ்மையுடன் மற்றவர்களை நம்மிலும் உயர்ந்தவர்களாய்க் கருதவேண்டும் எனும் பாடத்தினை கற்பிக்கின்றார். அவர் பிதாவின் பிரிய குமாரனாய் இருந்தும் பெருமை பாராட்டவில்லை. இதனாலேயே பிதாவினால் மாட்சிப் படுத்தப்பட்டவராகவும், உலக மாந்தர் அனைவருமே "இயேசுவே ஆண்டவர்" எனக் கூறும் அளவிற்கு உயர்த்தப்பட்டார்.

மேலும் படைப்பினில் அவருடைய மேன்மையினை பவுல் குறிப்பிடுகையில் "படைப்பனைத்திலுமே தலைப்பேறு" எனக் குறிப்பிடுகிறார். விண்ணிலும், மண்ணிலும் நாம் காண்பவையும், காணமுடியாதவையும், அதிகாரிகள், ஆட்சியாளர்கள் அனைத்துமே அவர் மூலம் அவருக்காகப் படைக்கப்பட்டதாய்க் கூறப்படுகிறது. பாவம் செய்து மனுக்குலத்தின் உறவு அறுக்கப்பட்டும், சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தினாலேயே மீண்டும் தந்தையுடன் ஒப்புரவாகும் நிலை உருவாகியது. இவையனைத்தும் நமதாண்டவர் கிறிஸ்துவின் மேன்மையினை எமக்குக் காட்டி நிற்கிறது. தம் முழு நிறைவும் அவரிலேயே குடிகொண்டு விளங்கும் அளவிற்கு இயேசு மேன்மைப்படுத்தப்பட்டார் எனப் பவுல் குறிப்பிடுகிறார்.

மற்றும் ஆண்டவரின் இரண்டாம் வருகை பற்றிக் கூறும் பவுல், ஆண்டவரின் வருகையினை எதிர்கொள்ள நாம் எப்போதுமே தயாராக இருக்கவேண்டும் எனக் கூறுகிறார். ஏனெனில் ஆண்டவரை அறியாத மற்றவர்களைப் போல் நாமும் இருந்துவிடக்கூடாது என எச்சரிக்கிறார். இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என விசுவசித்து நம்பும் நாம் அவருடைய மறு வருகையினையும் எப்போதும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். ஏனெனில் அது எப்போது நிகழுமென யாருக்குமே தெரியாது. தந்தை ஒருவரைத் தவிர யாருமே அறிந்திரார். கண்ணிமைக்கும் நேரத்திலே யாவும் நிகழ்ந்துவிடும். கட்டளை பிறக்க, வானதூதர் குரல் ஒலிக்க, கடவுளின் எக்காளம் முழங்க ஆண்டவர் வானின்று இறங்கி வருவார். அப்போது கிறிஸ்து மீது நம்பிக்கை கொண்டோர் அனைவரும், இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர். பின்னரே எஞ்சியிருக்கும், உயிரோடிருக்கும் நாம் மேலே எடுத்துக்கொள்ளப்படுவோம். நாம் நினையாத வேளையில், எதிர்பார்க்காத வேளையில் இவ்வருகை நிகழும். எனவே எல்லா வேளையிலும் தயாராக இருக்கவேண்டும். நாம் இருளில் நடப்பவர்கள் அல்ல, எனவே எப்போதும் விழிப்பாய் இருக்கவேண்டும். ஏனெனில் இது நிகழும் என்பதே நமது விசுவாசம். எனவே குடிவெறியாலும், களியாட்டங்களாலும், தூக்கமயக்கத்தாலும் மழுங்கடிக்கப்படாதவாறு எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும். ஒளியைச் சேர்ந்தவர்களாகிய நாம் அறிவுத் தெளிவுடனும், நம்பிக்கையுடனும், அன்புடனும் விசுவாசத்துடனும் எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும். திருடன் இரவினில் வீட்டினுள் நுழைவதுபோல் இவ்வருகையும் இருக்கும். எங்கும் அமைதி இனி ஆபத்து இல்லை என மக்கள் எண்ணிக்கொண்டிருக்கையிலே இது நிகழும். கருவுற்றிருப்பவருக்குப் பேறுகால வேதனை வருவதுபோல் திடீரென அழிவு வரும். எனவே யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. எனவே எப்போதும் எல்லா வேளையிலும் இவ்வருகையில் நாமும் பங்கெடுக்கத் தயாராக இருக்கவேண்டும். உலக கவலைகளில் மூழ்கிவிடாமல் ஆன்மீகக் காரியங்களில் பங்கெடுத்து எம்மைத் தயார் நிலையில் வைத்திருப்போம்.

## அதிகம் திருடப்பட்ட புத்தகம்

'கின்னஸ்' புத்தகம் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். உலக அளவில் வித்தியாசமாக யாராவது சாதனை செய்தால் இதில் பதிவாகும்.

பிரிட்டன் நூலகங்களிலிருந்து அதிகம் திருடப்பட்ட புத்தகம் என்று கின்னஸ் புத்தகத்துக்கே ஒரு சாதனையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழாக் காணும் நமது ஆயர்



## சிறப்புச் செவ்வி

திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாட்ட ஆயர் அதி. வந். கலாநிதி. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தனது ஆயர் பணியின் வெள்ளி விழாவினை இவ்வாண்டு மே மாதம் 07ம் திகதியன்று நிறைவு செய்கின்றார். இவ்வகையில் அவரின் சிறப்புச் செவ்வி தொண்டனில் இடம்பெறுவதில் நாம் பெரு மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றோம். இவ்வெள்ளிவிழா ஆண்டிலே எமது ஆயரவர்களைப் பற்றிப் பலரும் பல்வேறுவிதமான வழிகளில் வெவ்வேறு கோணங்களில் மக்கள் மத்தியில் எடுத்துச்சொல்ல இருக்கின்றார்கள். தொண்டனும் குறிப்பாக அவரின் பராமரிப்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்து வளர்ந்துகொண்டிருப்பவன் என்ற ரீதியில் ஆயர் அவர்களைப் பற்றி இச்செவ்வியினூடாக தனது பாணியில் எடுத்துசொல்ல விழைகின்றான்.

**அதிமேதகு ஆயர் அவர்களே! தங்கள் குடும்பம், இளமைக்காலம், கல்வி போன்ற விடயங்கள் பற்றி தொண்டன் வாசகர்களுக்குச் சற்றுக் கூறமுடியுமா?**

தாராளமாகக் கூறமுடியும். எனது பெயர் ஜோசப். வீட்டில் கிங்ஸ்லி என்றுதான் கூப்பிடுவார்கள். சுவாம்பிள்ளை என்பது குடும்பப்பெயர். 1936ம் ஆண்டு டிசம்பர் 09ம் திகதியன்று பிறந்தேன். எனது தகப்பனாரின் பெயர் அன்ரனிப்பிள்ளை சுவாம்பிள்ளை; தாயாரின் பெயர் சூசைப்பிள்ளை அந்தோனியா. அவரை முத்தம்மா என்றும் சொல்வார்கள். ஓர் அண்ணாவும், அக்காவும் எனக்கு மூத்தவர்களாவர். நான் மூன்றாவதும் கடைசியுமாவேன். எனது அப்பா தலைமையாசிரியராகப் பணியாற்றியவர்.

முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்றேன். அப்பாடசாலையை எஸ். எஸ். ஜே. அருட்சகோதரர்கள்தான் நடாத்தி வந்தார்கள். பின்னர் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் பெற்றுக்கொண்டேன். அங்கு எச். எஸ். சி வரையும் கற்றேன். 1950ம் ஆண்டு அ.ம.தி சபையினர் நடத்திய மார்ட்டின் சிறிய குரு மடத்தில் இணைந்துகொண்டேன். பின்னர் கொழும்பு புனித பேர்னாட் குருமடத்தில் பயின்றபின் கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. அக்கல்லூரியின் முதலாவது தொகுதியைச் சேர்ந்தவன் என்பதில் பெருமையடைகின்றேன். தொடர்ந்து 1958ம் ஆண்டு உரோமாபுரியில் உள்ள மறைபரப்புக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டேன். இளமாணி, முதுமாணி பட்டப்படிப்புகளுக்குப் பின்னர் 1961ம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டேன்.

**தாங்கள், ஒரு குருவானவராக வரவேண்டும் என்ற எண்ணம் எப்படி மனதில் வேர் விட்டது?**

எங்கள் பாடசாலைக்குப் பக்கத்தில்தான் சிறிய குருமடம் இருந்தது. பின்னேரங்களில் அங்கு விளையாடுவதற்காகச் செல்வோம். அதுமட்டுமல்ல குருமட மாணவர்கள் விடுமுறைக்காக வீடு செல்வதில்லை. மாறாகக் குடும்பத்தினர், நண்பர்கள் எல்லாரும் விடுமுறைக் காலங்களில் குருமடத்தில் வந்து நிற்கலாம். கலைநிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கும். இவையெல்லாம் என்னைக் கவர்ந்தன. எனவே குருமடத்தில் இணைந்துகொண்டேன். வீட்டாருக்கு மிகவும் சந்தோசம்.

**சிறுவயதில் தாங்கள் சற்றுக் குழப்படி என்று சொன்னார்களே... உண்மையா?**

(சிரிக்கின்றார்) உண்மைதான்! குழப்படிகாரப் பிள்ளைகள் கெட்டிக்காரர்களாக இருப்பார்கள் என்று எங்கள் பங்குச் சுவாமி வில்லியம் ஜேசுதாசன் (O.M.I) அடிக்கடி சொல்வார்.

**தங்களது குருப்பட்டத்தின் பின்னரான பங்குத்தளப் பணிகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு ஆகிய பங்குகளில் உதவிப் பங்குத்தந்தையாகவும், மடுமாதா யாத்திரை ஸ்தலத்தின் உதவி நிர்வாகியாகவும், கிளிநொச்சி பண்ணைப் பாடசாலையின் பணிப்பாளராகவும் பணியாற்றியபின் 1970 மே மாதம் தொடக்கம் ஆயரின் பிரத்தியேக செயலாளராகக் கடமையாற்றினேன். 1973ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் யாழ் மறைமாவட்டச் செயலார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகம், யாழ் மறைமாவட்டப் பாடசாலைகளின் பொதுமுகாமையாளர், யாழ் மறைமாட்ட சான்சலர், பாப்பரசரின் மறைபரப்புச் சங்கத்தின் தேசிய இயக்குனர் போன்ற பணிகளில் ஈடுபடவும் வாய்ப்புகள் கிடைத்தன. 1983ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி ஆயராக, உரோமாபுரியில் வைத்துத் திருநிலைப்படுத்தப்பட்டேன்.

**தங்களின் ஆயர் திருநிலைப்படுத்தல் சடங்கு பரிசுத்த பாப்பரசரால் நடத்தப்பட்டதா?**


இல்லையில்லை! ஒரு கருத்தரங்கிற்காக உரோம் சென்றிருந்தேன். அரைநாள் விடுமுறையில் கருதினால் அஞ்ஞேலோ (மறைபரப்புச் சபைத் தலைவர்) மற்றும் வேறு இரண்டு ஆயர்களால் மிகவும் எளிமையான முறையில் திருநிலைப்படுத்தப்பட்டேன்.

**ஆயர் வாழ்க்கையில் தங்கள் சமூகப் பணி என்ன?**

எமது மறைமாவட்டமே நிலப்பரப்பில் பெரிய மானிலம் ஆகும். அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை என்ற மூன்று நிர்வாக மாவட்டங்களை இது உள்ளடக்கியுள்ளது. இங்கு, எமது சமூக, சமயப் பணிகளை நாம் ஆற்றி வருகின்றோம். மேய்ப்புப் பணிச்சபை, இளைஞர் அணிகள், அன்பியம் என்பன இவற்றின் படிக்கற்கள். அத்துடன் பொதுநிலையினரை உருவாக்கும் பணியின் முக்கியத்துவமும் உணரப்பட்டுள்ளது. மறைக்கல்விப் பணியானது மறைக்கல்வி நடுநிலையத்தால் செயற்படுத்தப்படுகின்றது. சமூகத் தொடர்பு நிலையமும் இங்குள்ளது. இது மறைமாவட்ட ரீதியில் "தொண்டன்" சஞ்சிகையையும் தேசிய ரீதியில் "கத்தோலிக்க வானொலி"நிகழ்ச்சிப் பிரிவையும் கொண்டு நடத்துகின்றது. இவ்விடத்தில் 'மலர்வேந்தன்' அவர்களின் பணிக்கு பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் 1983 யூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு மட்டக்களப்பிற்கு வந்தவர். சமூகத் தொடர்பு நிலையம் உருவாக இவரும் அருள்தந்தை சி.பி.இராஜேந்திரம் (யே.ச) அவர்களும் கை கொடுத்து உதவினார்கள்.

என்னுடைய பதவிக்காலம் முழுவதும் அகதிப்பணி செய்வதே முக்கியமான கடமையாக இருக்கின்றது. 1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு வந்த மக்களுக்கு மீளக் குடியமர்த்த வசதிகள் செய்துகொடுத்தோம். இதற்கு 'செடக்' ஸ்தாபனம் 'எகெட்' மூலம் ஒத்தாசை வழங்கியது. அந்த நேரத்தில் அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எதுவுமில்லை. 'கிழக்குப் புனர்வாழ்வுக் கழகம்' என்ற அமைப்பினை ஸ்தாபித்து அதில் வேறு சில அமைப்புகளையும் உள்வாங்கி சில பணிகளை மேற்கொண்டோம். பின்னர் 'எகெட்' நிறுவனம் விஸ்தரிக்கப்பட்டு 'ஹரிட்டாஸ்-எகெட்' என்ற பெயரில் அது இப்போது இயங்கி பாரிய சமூகப் பணிகளை மேற்கொண்டுவருகின்றது

**ஆயர் என்ற வகையில் உங்கள் கல்விப்பணிகள் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லமுடியுமா?**



இங்குள்ள சகல கத்தோலிக்கப் பாடசாலைகள் மட்டிலும் எமக்குக் கரிசனை மிகவும் உண்டு. இதனை நாம், அரசாங்கத்துடன் இணைந்துதான் செயற்படுத்துகின்றோம். எம்முடன் கலந்தாலோசிக்காமல் கல்விப்பகுதியினர் எவ்வித முடிவும் எடுக்கமாட்டார்கள். கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்துகொண்டு செயற்படுகின்றோம்.

**அப்படியானால் கத்தோலிக்கப் பாடசாலைகட்கு குருமாரை நியமிக்கும் வாய்ப்புகள் உள்ளதா?**

அப்படியில்லை! அவ்வளவு எண்ணிக்கையில் எம்மிடம் குருக்கள் இல்லை. தற்போது மூன்று குருக்களை பாடசாலைகளில் இணைத்துள்ளோம். போதிய குருக்கள் தோன்றினால் மேலும் சிலரைக் கல்விப்பணியில் ஈடுபடுத்தலாம். குருமட மாணவர்களை உருவாக்கும் புனித மிக்கேல் கல்லூரி போன்றவற்றில் நாம் மிகவும் கரிசனையுடன் இருப்போம்.

**தங்கள் பணியில் தாங்கள் சந்தித்த சாதனை, சோதனைகள் என்ன?**

(சிரிக்கின்றார்) ஒவ்வொரு நாளும் சோதனைதான். இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்கள், யுத்தப் பாதிப்புகள், பங்குகளில் ஏற்படும் பிரச்சினைகள் என்றெல்லாம் நிறையப் பிரச்சினைகள் வருகின்றன. இவை நம் கைகளுக்கு அப்பாற்பட்டவை. எனவே இறைவனின் துணையும், மக்களின் ஒத்துழைப்பும் இருந்தால் முடியுமானவளவு சமநிலையை ஏற்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்கள் பணியில் மறக்கமுடியாத சம்பவம் என்ன?**

கடல்கோள்தான்! எமது மறைமாவட்டம் முழுவதும் இதனால் பாதிக்கப்பட்டது. அனைவருக்கும் பணி தேவைப்பட்டது. உயிரிழப்புகள், உடமையிழப்புகள் எல்லாம் மக்களின் மனதைப் பாதித்துவிட்டன. பலர் இவர்களுக்கு மறுவாழ்வளிக்க விரைந்து வந்ததால் ஒரு வகையில் புனர்வாழ்வை அளிக்க முடிந்தது.

**இறுதியாக எமது மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தியென்ன?**

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பரஸ்பர நம்பிக்கையும் புரிந்துணர்வும் அவசியம். பல்சமயக் கலந்துரையாடல்கள் இதற்கு வழிவகுக்கும். மற்றைய சமய மக்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் நல்ல கிறிஸ்தவ முன்மாதிரிகையை நாம் காட்டமுடியும்.

ஒடுக்கப்பட்ட இன மக்களின் விடுதலைப் போராட்டங்கள் எல்லா இடங்களிலும் உண்டு. விடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாதமாக மாறும்போதுதான் சிக்கல் நிலமைகள் உண்டாகின்றன. இது மனித நேயத்திற்கு அப்பாற்பட்டது. நீதியுடனும் நேர்மையுடனுமான சமாதானமே எமது தணியாத தாகம். இன்று எமது நாட்டில் பெரும்பான்மையின மக்கள் யுத்தம் என்ற மாயைக்குள் அகப்பட்டுள்ளனர். இம்மாயை எத்தனை நாள் நிலைக்கும் என்றுதான் தெரியவில்லை. இருப்பினும் யுத்தத்தை விட்டு பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் நீடிய சமாதானத்திற்காக நாம் நம்பிக் காத்திருக்கின்றோம்.

எமது மறைமாவட்டத்திற்கு இன்னும் அதிகளவு குருக்கள் தேவைப்படுகின்றனர். அதற்கான இறையழைத்தலுக்காக மன்றாடவேண்டும். முதன்முறையாக எமது மறைமாவட்டத்தில் இருந்து துணை ஆயர் ஒருவர் தெரிவாகியுள்ளார். எமது பரந்துபட்ட மறைமாவட்டத்தில் எமது பணிக்கு அவரின் துணை கட்டாயம் தேவை. இதற்காகத்தான் துணை ஆயரின் தேவை பற்றி எடுத்துச் சொல்லியிருந்தேன். இவர்களின் உதவியுடன்தான் நாம் இன்றைய உலகில் எதிர் நீச்சல் போடவேண்டியுள்ளது.

**— பெஸ்லியோ வாஸ் —**

# சிலப்பதிகாரத்தில் சில குறிப்புகள்

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -**

“கலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த இலம்பாடு நாணுத் தரும்” (காதை 9 வரி 70-71) இவ்வாறு, தான் காதலித்த பெண்ணை நொந்து கூறுகின்றான் கோவலன், மாதவி என்ன செய்வாள்? பாவம். அவள் உள்ளம் கவலையில் திளைத்து காதலனிடம் அன்பு ஒன்றை வேண்டுகிறது. மாதவியின் துயரம் அவளை வருத்தியது. அது ஊழ் வினையால் எழுந்தது. இது சமண தத்துவக் கருத்து.

சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் இசை பற்றிக் கூறுகின்றார், அவர் மாபெரும் இசைக் கலைஞர். சிலப்பதிகாரத்தில் அவர் தரும் முத்து நுண்கலைகள்: கண் கூடு வரி, காண் வரி, உள் வரி, புற வரி, கிளர் வரி, தேர்ச்சி வரி, காட்சி வரி, எடுத்துக்கோல் வரி என மாதவியின் பல்வேறு நடனக் கலையின் சிறப்புகளையும் ஆடற்கலையின் உயர்வுகளையும் எடுத்து விளக்குகின்றார் அடிகளார்.

“கானல் வரி” என்பது கடற்கரையில் கானலைப் பற்றிப் பாடுகின்ற ஓர் இசைப்பாட்டு ஆகும். கானலானது ஒரு கடற்கரைச் சோலை, “கதைக்கு கால் உண்டு” ஓரிடத்தே ஒரு கால் ஒரு சூழலினிடையே நிகழும் தலையாயவரின் நடத்தையே கதையாகும். இது கானல் வரியின் உரிப்பொருளாக அமைந்துள்ளது. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு சாதல் போன்ற துன்பமே அங்கு எழும்.



காதல் காதல்
காதல் - காதல்
போயிற் சாதல் சாதல்
சாதல்
(பாரதி - குயில் பாட்டு)

மேலும் கானல்வரி தன்னுடைய கருப்பொருள், பெரும் பொருள் சிறு பொருள் போன்ற சங்க மரபு இலக்கியங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. கானல் வரி சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதி. சிலப்பதிகார ஆசிரியர் தம் காலத்தையும், தம் காலத்திற்கு முந்திய இசை நுணுக்கங்களையும் கானல் வரியில் அமைத்துள்ளார். இதனாலேயே சிலப்பதிகாரம் என்ற மணியாரம் படைத்த தமிழ் நாடு என பாரதி இந்நூலைப் புகழ்ந்தார். கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தல் பாடல். அவை கானற் பாணி என ஆசிரியரே பிற இடங்களில் கூறுவதால் பாணி என்பதே வரியாகும். இது தேவபாணியல்லாத பாணி. பண்ணோடு தொடர்பு செய்வது பாணி.

“வரிப்பாடலானது பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியான் மயங்கிச் சொல்லப்பட்ட எட்டியல்பும், ஆறணியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து, கருதப்பட்ட சாந்தியும், சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும்” என்று எழுதுகிறார் அரும்பத உரைக்காரர். ஆறு என்ன? எட்டு என்ன? எட்டம் மட்டம் ஆறாம் மட்டமா? அவைதான் என்ன? தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதல், சுரிதகம், அம்போதரங்கம் என்ற ஆறா? அம்போதரங்கத்தைப் பேரெண், சிற்றெண், இடை எண் என மூன்றாக எண்ண வரும் எட்டா? இவற்றின் நுட்பமெல்லாம் தெரியாமற்போனாலும் பலவகை இராகங்களும், பலவகைக் கதைப்பகுதிகளும் கலந்துவரும் கலவையான இசைப்பாட்டே என்று இதைக் கொள்ளலாம்.

“இடத்திற்கும் பொருளிற்கும் ஏற்ப மாறி மாறி வரும் கலவை நிலை. அவற்றினிடையே ஓர் ஒற்றுமையும் வளர்ச்சியையும் காட்டித் தோன்றும் போலும்”

மேற்கோள்
தெ.பெ.மீனாட்சி சுந்தரனார்.
தமிழ் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
(கானல் வரி, 02 வரிப் பாட்டு பக்கம் 103)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாழ்க வாழ்க !



கிழக்கின் விளக்காக விளங்கினாம் எல்லோரும்
இழுக்கின்றி வாழ வழிசெய்தார் - யோசப்
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையே அவருக்கு
இங்கேது இணையுண்டு சொல்

எண்ணிப் பார்க்கின்ற போதெல்லாம் இவரைப்போல்
பண்ணிய வேறெவரும் இல்லையே - இருபத்து
ஆண்டோடு ஐந்தென்ன ஒருநூறு வந்தாலும்
காண்டலும் அரிதென் றறி



கனவொன்று நனவாய் வாய்த்ததென் றனைவரும்
மனமொன்றி மகிழவே மலர்ந்தது - மண்ணின்
மைந்தனே புதிய ஆயராய் எழுந்தார்
மகிழ்ந்திறை கூறிடு நன்றி

கல்வியில் வல்லோன் கருத்தினைக் கூறிடும்
சொல்லிலும் எழுத்திலும் வல்லோன் - விவிலிய
அறிவிலும் அறமுடை வாழ்விலும் பண்பிலும்
நெறியிலும் உயர்ந்தோன் என்க

அருள்மிகப் பெற்றநல் லாயர்கள் இவர்கள்
மருள்நீக் கிறை வழியில் – மாண்புடன்
சென்றிட மறையொளி ஏற்றிட வருமிடர்
வென்றிட வாழ்க! வாழ்க!

– திருமுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி) அலகு – 2

## நிருபங்களில் வியாபித்து நிற்கும் ஒழுக்க விழுமியங்கள்.



### 3. புனித பவுல் நிருபங்கள் எழுதக் காரணம்.

திருத்தூதரான புனித பவுல் ஓர் ஈடிணையற்ற நற்செய்திப் போதகர், இறையியலாளர், மேய்ப்பர் என்றால் அது மிகையாகாது. இவரின் பல்வேறு பரிமாணங்கள் இவரின் மடல்களில் வெளிப்படுகின்றன. பவுல் அடிகளாரின் ஆளுமையும் மதிப்பீடுகளும் விழுமியங்களும் கிறிஸ்து இயேசுவின் மீது அவர் கொண்டிருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை, ஆழமான அன்பு, இறை சமூகங்களின்மேல் அவர் கொண்டிருந்த கரிசனை, அவரின் வழி நடத்துதல், அன்போடு கூடிய கண்டிப்பு, சமூகங்களைத் திசை திருப்புவோர் மீது அவர் கொண்டிருந்த கோபம் என அவரின் பன்முகங்கள் அவரின் மடல்களில் காணக்கிடக்கின்றன.

கிறிஸ்தவ வாழ்க்கை நெறிமுறை பற்றியும், அதன் நோக்கம் பற்றியும் தூய பவுல் பலமுறை தனது மக்களுக்குத் தெரிவித்தார். இவரின் எண்ணப்படி "கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். இனி வாழ்பவன் நானல்ல என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே" (கலாத்தியர் 2:20) என்ற நிலையில்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வும் நிறைவு காண வேண்டும் என்று கருதுகிறார். என்னதான் கிறிஸ்து தனது பாடுகள், மரணம், உயிர்ப்பினால் மனிதர் அனைவருக்கும் மீட்பைப் பெற்றுத் தந்துவிட்டாலும் ஒவ்வொரு மனிதனும் தனது முழு மனச் சுதந்திரத்துடன் மீட்பைத் தனதாக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டுமென்று புனித பவுல் கருதுகிறார். அதனால்தான் அதற்குரிய நம் வாழ்வின் கடமைகள் பற்றி அவர் போதிக்கின்றார். கிறிஸ்துவின் சமாதானம் நம்மில் ஆட்சி செய்யும்போது, ஒருவர் ஒருவரை நாம் மன்னித்து, அனைத்திலும் அன்பைத் தேடி தேவ ஆவி அளிக்கும் புதுவாழ்வைப் பெறுவோம் என்பது புனித பவுலின் அசைக்கமுடியாத நம்பிக்கை. கொலோசேயர் 3:12-17 வசனம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது. அதுவே அவரது போதனையின் நோக்கமும் ஆகும்.

இதனால்தான் புனித பவுல் தான் பாடுபட்டு உருவாக்கிய திருச்சபையில் குழப்பங்கள் நேர்ந்தபொழுது கொதித்தெழுந்தார். "நீங்கள் என்னைப்போல் ஆகுங்கள்; நான் உங்களைப்போல் ஆனேன் அல்லவா? நீங்கள் எனக்கு அநீதி ஒன்றும் இழைக்கவில்லை" (கலாத்தியர் 4:12) என முழங்குகிறார். தூய பவுல் ஒரு மேய்ப்பராகச் செயற்பட்டதால்தான் "நான் பிரம்போடு வரவேண்டுமா அல்லது அன்போடும் கனிவான உள்ளத்தோடும் வரவேண்டுமா?" (1கொரி 4:21) என்று கேட்பதுடன் நீங்கள் என் அன்பார்ந்த பிள்ளைகள் என எண்ணி, உங்களுக்கு அறிவு புகட்டவே இவற்றை நான் எழுதுகின்றேன்" (1கொரி 4:14) என்று ஓர் ஆசிரியர் என்ற நிலையில் கிறிஸ்தவ மக்களை நெறிப்படுத்தப் பவுல் பலவற்றை எழுதினார். கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு மாறான மக்களது வாழ்க்கை முறையைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சரிசெய்வதற்குப் பவுல் தனது கடித முறையைப் பயன்படுத்தினார்.

– தொடரும் –



## குறும்(புப்)பா - 4

பெண்ணடிமை போதுமடா நிறுத்து
பேசுகிறார் அந்தோனி பெருத்து
எண்ணியஞ்சு இலட்சமதை இவர்வாங்கிக் கல்யாணம்
பண்ணியது பலருக்குச் சிரிப்பு

~ மலர் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்தந்தை தியோப்பிளஸ் றாகல் அடிகளார் இறைவனடி சேர்ந்தார்.



திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்பணியாளர் தியோப்பிளஸ் றாகல் அவர்கள் இம்மாதம் முதலாம் நாள் (01.05.2008) இறைவனடி சேர்ந்தார்.

1937ம் ஆண்டு மட்டக்களப்பு சின்னஉப்போடையில் பிறந்த அவர் காலஞ்சென்றவர்களான அல்பிரட் றாகல், அக்னஸ் றாகல் ஆகியோரின் அன்பு மகனுமாவார்.

தமது பாடசாலைக் கல்விக்குப் பின் அரச சேவையில் ஈடுபட்ட அவர் தமது முப்பத்தியிரண்டாவது வயதில் இறை அழைத்தலை ஏற்று குருமடம் சென்றார். 1969ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு திருமலை தூய மரியாள் பேராலயம், புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயம், பாலையூற்று, கல்முனை, செங்கலடி, வாழைச்சேனை, இருதயபுரம், கல்லாறு, ஆயித்தியமலை ஆகிபங்குகளில் பணிபுரிந்துள்ளார்.

உறுதியான உடற்கட்டுக் கொண்ட றாகல் அடிகள் கடின உழைப்பு மிகுந்தவர். பாலையூற்று, கல்முனை போன்ற பங்குகளின் கட்டுமானப் பணிகளில் வேலையாட்களோடு தானும் ஒரு வேலையாளாக நின்று அவர் பணியாற்றியதை நான் பார்த்து வியந்திருக்கிறேன். பணியாளன் என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர். எளிமையும், உழைப்பும் நிறைந்தவர். சிறிது நேரமும் ஓய்ந்திராது தேனீ போன்று சுறுசுறுப்பாக இருப்பார். புதிய புதிய விடயங்களைத் தேடுவதிலும், புதிதாகச் செய்வதிலும் ஆர்வம் கொண்டவர். தாம் பணியாற்றிய பங்குகளில் திருவழிபாட்டிசையை மேம்படுத்துவதில் அதிக அக்கறை காட்டினார். கிறீஸ்தவ இசைக்கலைஞர்கள் மீது அதிக அன்பும் கரிசனையும் கொண்டவர். ஒரு சிலரை அவரே தம்மோடு வைத்துப் பராமரித்தார். அவர்கள் தம்மை வளர்த்துக்கொள்ள உதவியாகவும் இருந்தார். கைவிடப்பட்டவர்கள், அனாதைகள் மட்டில் இரக்கம் காட்டியதோடு இக்கட்டான வேளைகளில் உதவிசெய்யப் பின்வாங்காதவர்.

வெகுஜனத் தொடர்புத் துறையிலும் ஆர்வம் கொண்ட அடிகளார் நமது மறைமாவட்டத்தின் இரண்டாவது சமூகத் தொடர்புத் துறை இயக்குனராவார். முதலாவது இயக்குனர் காலஞ்சென்ற அருள்தந்தை நோபட் ஒக்கஸ் அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரைத் தொடர்ந்து தொடர்புத்துறை இயக்குனராகப் பொறுப்பேற்றுக்கொண்ட அடிகளார் அப்போது கல்முனைப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட காலம் அது. கிறீஸ்தவ வீடியோ நாடகம் ஒன்றைத் தயாரிக்க விரும்பிய அடிகளார் அதற்கான முயற்சிகளில் இறங்கினார். புதிய துறை, புதிய அனுபவம், கடின உழைப்பு. அதற்கான எழுத்துப்பிரதியை காலஞ்சென்ற செல்லத்துரை ஜெயராஜா எழுதினார். காலஞ்சென்ற அருள் கலாநிதி றெக்ஸ் ஜோசப், அருட்சகோதரர் மத்தியு போன்ற பலரும் அடிகளாருக்கு உதவியாக இருந்தனர். கொழும்பு தேசிய சமூகத் தொடர்பு நிலையத்திலிருந்து தொழில்நுட்பக் கலைஞர்களை இதற்காக வருவித்திருந்தார். ஏறத்தாள மூன்று மாத அளவாக தயாரிப்புப் பணிகள் நடைபெற்றன. வீடியோ நாடகம் உருவானது. அது எந்தளவு வெற்றி பெற்றது என்று தெரியவில்லை. ஆனால், நான் அறிந்த வரையில் கிழக்கில் எழுந்த முதல் வீடியோ நாடகத் தயாரிப்பு என்ற வகையில் இது குறிப்பிடத்தக்கது. அதன்பின் அடிகளார் வீடியோ நாடகத் துறையில் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆயினும் தொடர்புத் துறைக்காக சில உபகரணங்களை வாங்கியிருந்தார். அது நீண்டகாலமாகப் பாவனையில் இருந்து பயன் தந்தது. 1983ம் ஆண்டின் நடுப்பகுதியில் தொடர்புத் துறையிலிருந்து அடிகளார் விலகிக் கொண்டார்.

முப்பத்தொன்பது ஆண்டுகாலம் திருச்சபைக்காக குறிப்பாக நமது மறைமாவட்ட வளர்ச்சிக்காக கடினமாக உழைத்த அடிகளார் புதிய துணை ஆயர் அன்னாரது இரங்கல் திருப்பலியில் குறிப்பிட்டதுபோல் கடின உழைப்பாலேயே உடல் வலி குன்றி நோயுற்றார். நீண்ட காலம் வாழ்வார் என எதிர்பார்க்கப்பட்டவர் தமது 71வது வயதில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டு இறைவனடி சேர்ந்தார்.

நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனாகப் பணிபுரிந்த அவர் இன்ப வான்வீட்டில் இனிதே இளைப்பாற இறைஅருள் வேண்டுவோம்.

**– மலர் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்பினால் மக்களை அரவணைக்கும் ஆயர்

- அன்புமணி -

இறைவன் ஒருவன். ஆனால் அவனை அடைவதற்கு வழிகாட்டும் சமயங்கள் ஏராளம். இறைவன் மனிதனைப் படைத்தான். மனிதன் சமயங்களைப் படைத்தான். இன்று இறைவனை மறந்து சமயங்களை இறுக்கமாகக் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கும் மனித இயல்பைப் பார்க்கின்றோம்.

இதனால் சமயங்களின் அடிப்படை நோக்கத்தை மனிதன் மறந்துவிடுகின்றான். அனைத்து சமயங்களினதும் அடிப்படை மனித நேயமே. அது இல்லையென்றால் நாம் இறைவனை மறந்துவிட்டதாகவே கொள்ளவேண்டும்.

நமது ஆயரைப் பற்றிச் சிந்திக்கும்போது மேற்படி எண்ணங்களே என் இதயத்தில் வட்டமிடுகின்றன. அவர் ஓர் அற்புதமான மனிதர். அன்பினால் அனைவரையும் அரவணைக்கும் தெய்வம். இன மத வேற்றுமை கடந்து மனித நேயத்தை நேசிக்கும் அற்புதர். இதை நான் எழுந்தமானமாகச் சொல்லவில்லை. 1995ம் ஆண்டிலிருந்து அவருடன் பழகிய அனுபவத்தைக் கொண்டு சொல்கிறேன். அவருடைய பல்வேறு சமூகப் பணிகள், அவர் பழகும் பல்வேறு மனித சமூகங்கள், அவர் பங்குகொள்ளும் பல்வேறு கலை இலக்கியப் பணிகள் இவை அனைத்திலும் ஊடுருவி நிற்கும் மனித நேயத்தை நான் கண்ணால் கண்டு இதயத்தால் உணர்ந்த காரணத்தினாலேயே இப்படிக் கூறுகிறேன். மதவேறுபாடு கடந்த இவரது மனித நேயத்துக்குத் தலைவணங்குகிறேன்.

பல்வேறு காரணங்களுக்காக நானும் முன்னாள் கலாசார உத்தியோகத்தர், க. தங்கேஸ்வரி (தற்போது பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களும் ஆயர் இல்லத்துக்குச் சென்று அவரைத் தரிசிப்பது வழக்கம். என்ன முக்கியமான வேலைகள் இருந்தாலும் எங்களுக்காக நேரம் ஒதுக்கி, எங்கள் பிரச்சினைகளை அக்கறையோடு கேட்டு அதற்கான ஆலோசனைகளையும் வழங்குவார்; தீர்வுகளைக் கூறுவார். எந்தவிதமான பந்தாவும் இல்லாமல் சொந்த உறவினரைப்போல் பேசிப் பழகுவார். இனிய சுபாவம், அன்பான உரையாடல், அவசரமில்லாத நிதானம் அவருடைய பெருந்தன்மை எங்களைப் பிரம்மிக்க வைக்கும். நாம் எத்தகைய மனச்சுமையுடன் சென்றாலும் அவர் காலில் விழுந்து வணங்கியவுடன் மனம் இலேசாகிவிடுகிறது. அவரிடமிருந்து விடைபெற்றுத் திரும்பும் போது மனதில் நிம்மதி; உள்ளத்தில் தெளிவு; உடலில் உற்சாகம்.

பல பிரச்சினைகளால் 'ரென்ஷன்' ஏற்படும்போது அவரைத் தரிசிக்கச் செல்வது எங்கள் வழக்கம். தரிசனத்தின் பின் எங்கள் ரென்சன் பறந்து விடும். அவருடைய பரந்துபட்ட பணிகளை நான் எண்ணிப் பார்க்கிறேன்.



இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக இவர் திருகோணமலை, கொழும்பு, வெளிநாடு எனப் பல்வேறு பயணங்களை மேற்கொள்வார். பல்வேறு கோணங்களிலிருந்து வெளிப்படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பார். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அவர் நிதானம் இழந்ததில்லை, உணர்ச்சிவசப்பட்டதில்லை, பதற்றப்பட்டதில்லை. அமைதியாகவே உரையாடுவார்.

இவருடைய 09.12.2006 பிறந்த நாளை ஒட்டி அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ. மத்தியூ அவர்கள் ஒரு சிறு நூலை வெளியிட்டிருந்தார். அதில் அவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார்: "கிறீஸ்தவம் எல்லா இனங்களுக்கும் உரியது. எல்லாப் பண்பாடுகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கக்கூடியது. இதனை ஆயர் அவர்கள் தம் வாழ்க்கையில் சாதித்துள்ளார். கிறீஸ்தவத்திற்கு இரண்டாம் வத்திக்கான் தந்த அறை கூவலுக்கு ஏற்புடைய உருவமும் உயிரும் அளித்த ஆயர்களுள், கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆயரவர்கள் சிறந்து விளங்குகின்றார். 'விசுவாசத்திற்கும் மனித உறவுகளுக்கும் சேவை ஆற்றுவதே பணி' என்ற விருதுவாக்கியம் ஆயரின் இலட்சியக் கோட்பாடாகும். 07.05.1983ல் கர்தினால் ஆஞ்சலோ ரோசியாவினால் உரோமாபுரி மறைபரப்புக் கல்லூரியில் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார் அருட்பணி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள்"

இதன்படி 2008, ஆயரது வெள்ளிவிழா ஆண்டு



ஆகிறது. 07.05.2008ல் 25 வருட ஆயர்த்துவ வாழ்க்கையைப் பூர்த்தி செய்யும் ஆயர், வெள்ளிவிழா ஆண்டைப் பூர்த்தி செய்கிறார். இவ்விழா நம் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.

07.05.1983ல் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 07.06.1983ல் திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயராக நியமனம் பெறுகிறார். அந்த வகையில் மட்டக்களப்பில் பணிபுரியும் இவ்வாண்டில் வெள்ளி விழாவைக் காண்கிறார். 09.12.2008ல் 72 வயதைப் பூர்த்தி செய்யும் ஆயர் இன்னும் மூன்று ஆண்டுகளில் பவள விழாவையும் காணவுள்ளார்.

சமரச சன்மார்க்க நோக்குடைய ஆயர் இன ஒற்றுமை பற்றிய ஆழமான சிந்தனையுடையவர். அத்தகைய சிந்தனையைச் செயலில் காட்டி வருபவர். ஒரு சில நிகழ்வுகள் பின்வருமாறு:

01. ஜூலை 1983 இனக்கலவரத்தில் கொழும்பி லிருந்து துரத்தியடிக்கப்பட்ட மக்கள் மட்டக்களப்புக்கு வந்தபோது அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயிரம் ஆயிரமாக வந்து குவிந்த இவ்வகதிகளை பாடசாலைகளில் தங்கவைத்து, உணவு உடை வழங்கப்பட்டது. SEDEC என்ற நிறுவனம் மூலம், இவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

02. EHED நிறுவனம் அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டது.

03. பின்னர் 1984ல் பல சுயேச்சை நிறுவனங்களை ஒன்றிணைத்து, ERO (கிழக்குப் புனர்வாழ்வுக் கழகம்) நிறுவனத்தை நிறுவி புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

04. 26.12.2004ல் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பங்கள், மீண்டும் புத்துயிர் பெறும் வகையில் அவர்களுக்கான வீடமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

05. சீலோம் வைத்தியசாலை நிறுவப்பட்டு மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன.

06. தொடர்பாடல் நிலையம் ஒன்று நிறுவப்பட்டு வானொலிக்கான நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு வானொலிக்கு வழங்கப்படுகின்றன. "தொண்டன்" மாத சஞ்சிகை வெளிவருகிறது.

ஆயரவர்கள் மெற்கொண்டுள்ள நூற்றுக் கணக்கான பணிகளுள் மாதிரிக்காக ஒரு சிலவற்றை மேலே குறிப்பிட்டோம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையில் ஆயர்களின் அருள்பணி

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் கிறீஸ்துஸ் தோமினுஸ் இலத்தீன் தலைப்புடன் அதாவது கிறீஸ்து ஆண்டவர் என்னும் விதித் தொகுப்பு ஏட்டை 28 ஒக்டோபர் 1965 வெளியிட்டது. திருச்சபையின் அனைத்து அதிகாரங்களும் அருளடையாளங்களிலிருந்து பிறக்கின்றன. ஆயர் திருநிலைப்பாடு ஓர் அருளடையாளம். இருப்பினும் ஆயர்கள் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டாலும் தங்களின் ஆட்சியுரிமையைத் திருத்தந்தையிடமிருந்து பெறாமல் ஆயர் திருநிலைப்பாட்டிலிருந்தே பெறுகின்றனர். மறைமாவட்ட ஆயர்கள் தங்களுடைய சொந்த மறைமாவட்டத்தின் நலனில் மட்டுமல்ல அனைத்துலகத் திருச்சபையின் நலனிலும் அக்கறையும் பொறுப்பும் கொண்டுள்ளனர். திருத்தூதர் வழிவரும் ஆயர்கள் தலையான உரோமை ஆயரோடு ஒன்றித்து முழுத்திருச்சபையில் ஒப்புயர்வற்ற ஆட்சியுரிமை கொண்டுள்ளனர். ஆயர்கள் தமது திருச்சபைகளில் போதிக்கும் பணி, தூய்மைப்படுத்தும் பணி, ஆளும் பணி ஆகிய முப்பணிகளை ஆற்றுகின்றனர். ஆயர்கள் தங்களுடைய மறைமாவட்டத்து நலனில் கண்ணும் கருத்துமாயிருப்பதுபோல் பல்வேறு சபைகளின் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ளனர்.

(திருச்சபை வரலாற்றுத் துளிகள்)

பல தமிழ் ஆயர்களை ஈன்றெடுத்த பெருமை எம் இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறைக்குரிய சிற்றூர்களாம் கரம்பொன், நாரந்தனை ஆகியவற்றிற்குரியதென்றால் அது மிகையில்லை. இக்கிராமங்களிலிருந்துதான் முறையே அதிவந்தனைக்குரிய தமிழ் ஆயர்களான எமிலியானுஸ் பிள்ளை, தியோகுப்பிள்ளை, L.R. அன்ரனி, ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோர் உதித்தார்கள். இக்கிராமத்தில் அமைந்திருக்கும் பங்கு ஆலயமான சம்பேதுரு, சம்பாவுலு ஆலயத்தில்தான் இவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். இங்குதான் சிறியோனாகிய அடியேனும் பிறந்து திருமுழுக்குப் பெறப் பாக்கியம் பெற்றேன்.

இவர்களில் வெள்ளிவிழா நாயகனான நமது மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இவரிடம் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், மறைமாவட்ட மக்கள் இவரை அணுகவேண்டுமாயின், பங்குத் தந்தையூடாகவே போகவேண்டும் என்பது. இவர் இறைமக்களுக்கு ஆன்மீக வழிகளிலும், கல்விசார் விடயங்களிலும், தனிப்பட்ட பிரச்சினைகளிலும் கூடப் பெரிதும் உதவுபவர்.

மரியாயின் சேனையை மட்டக்களப்பில் ஆரம்பித்த காலஞ்சென்ற, சகோ. P. M. ஜோசப் அவர்களும், நானும் புளியடிக்குடாப் பங்கில் மகா பரிசுத்த திரு இருதயச் சபையொன்றை ஆரம்பிக்க உத்தேசித்து, அன்று எங்கள் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்த ஜோசப்மேரி இயேசுசபை அடிகளார் மூலம் ஆண்டகையை அணுகினோம். உடனே அவரும் அதற்கு அனுமதியும், ஆதரவும் தந்தார். நாங்களிருவரும் தயாரித்த "மகா பரிசுத்த இயேசுவின் திரு இருதயச்சபைக் கூட்ட ஒழுங்குகளும் செபங்களும்" எனும் கைநூலை அனுமதித்து, அப்போது குரு முதல்வராகப் பணிபுரிந்த அருள்தந்தை டிக்கோனிங் அடிகளார் மூலம் "அச்சேற்றலாம்" என அனுமதியும் வழங்கினார். இதன் பயனாக மட்டக்களப்புக் கோட்டத்தில் முதன்முதலாக 1993ம் வருடம் ஆடி மாதம் 04ம் திகதி புனித செபஸ்தியார் ஆலயத்தில் மகா பரிசுத்த இயேசுவின் திரு இருதயச் சபை ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் இக்கைநூலில் 100 பிரதிகளை என்னிடம் பெற்றுச் சிலாபம் மறைமாவட்டத்துக்கும் அனுப்பி அங்கும் இயேசுவின் திரு இருதயச் சபையினைத் தமிழில் ஆரம்பிக்க உதவினார்.

இவரின் இறைபணி மென்மேலும் தொடர மகா பரிசுத்த இயேசுவின் திரு இருதயத்தைத் தினமும் வேண்டுகிறேன்.

– திரு. எட்வேட் தேவதாசன்,
புளியடிக்குடாப் பங்கு –

# நானறிந்த ஆயர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30- 06 - 2008




# விவிலியம் கற்போம் - 66

(எண்ணிக்கை 4:21–49)

## (பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: கேர்சோன் புதல்வர்களையும் அவர்கள் மூதாதையர் வீடுகள், குடும்பங்கள் வாரியாகக் கணக்கெடு. ................................ வேலையின் திருப்பணிக்குவரும் முப்பது வயது முதல் ஐம்பது வயது வரையுள்ள அனைவரையும் கணக்கெடு. பணிசெய்யவேண்டியோரும், சுமைகள் தூக்க வேண்டியோருமான கேர்சோனியர் குடும்பங்களின் பணி இதுவே. அவர்கள் எடுத்துச்செல்ல வேண்டியவை: திரு உறைவிடத்தின் திரைகள், மூடுதிரையோடு சேர்ந்து சந்திப்புக் கூடாரம், அதன் மேலே உள்ள ......................................., மூடுதிரை மற்றும் அவர்களின் வேலைக்கான அனைத்துக் கருவிகள் ஆகியவை. அவை தொடர்பான அனைத்துப் பணிகளையும் அவர்கள் செய்வார்கள். ..................................... அவன் புதல்வர் கட்டளையிட்டபடியே கேர்சோனியர் புதல்வர் செய்யவேண்டிய எல்லா வேலைகளும், அதாவது அவர்கள் செய்யவேண்டியவை, சுமக்கவேண்டியவை அனைத்தும்இருக்கும்; தூக்கிச்செல்ல வேண்டிய பொறுப்பு அனைத்தையும் நீங்கள் அவர்களிடம் விட்டுவிடுங்கள். அவர்களின் பணி, குருவாகிய ஆரோன் மகன் .................................... மேற்பார்வையின் கீழ் இருக்கும். மெராரி புதல்வரை அவர்கள் மூதாதையர் வீடுகள், குடும்பங்கள் வாரியாகக் கணக்கெடு. அவர்கள் தூக்கிச்செல்லவேண்டிய பொருள்களைப் பெயர் குறித்து அவர்களிடம் ஒப்புவி. இதுவே சந்திப்புக் கூடாரத்தில் ..................................... குடும்பங்கள் செய்யவேண்டிய மொத்தப் பணி. இப்படி எண்ணப்பட்டோர் தொகை 2750. மோசே வழியாக ஆண்டவர் கூறியபடியே அவரும் ஆரோனும் எண்ணிய ..................................... இவர்களே. தங்கள் மூதாதையர், குடும்பங்கள் வாரியாக கேர்சோன் புதல்வருள் எண்ணப்பட்டோர் இரண்டாயிரத்து அறுநூற்று முப்பது பேர். ஆண்டவரின் வார்த்தையின்படி .......................................... ஆரோனும் எண்ணியதில் சந்திப்புக் கூடாரப் பணி செய்தோரின் மொத்தத் தொகை இதுவே. குடும்பங்களின் வாரியாக எண்ணப்பட்டோர் மூவாயிரத்து இருநூறு பேர். மோசே வழியாக ......................................... கூறியபடியே எண்ணியதில் மெராரியர் குடும்பங்களில் எண்ணப்பட்டோர் இவர்களே. மோசேயும் ஆரோனும் ..................................... தலைவர்களும் எண்ணியதில் மூதாதையர் வீடுகள், குடும்பங்கள் வாரியாக எண்ணப்பட்டடோர் எல்லோரும்: சுமை தூக்கும் திருப்பணிக்கு எண்ணப்படடோர் எண்ணாயிரத்து ஐநூற்று எண்பது பேர். இவ்வாறு ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடி அவர் ............................ கணக்கெடுத்தார்.

**விடைகள் : இஸ்ரயேல், இத்தாமரின், அவர்களை, ஆண்டவர், வெள்ளாட்டுத் தோல், ஆரோன், கோகாத்தியர், சந்திப்புக் கூடார, மெராரியர், மோசேயும்.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 66

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. உலகத்திலே மிகப் பெரிய மியூசியம் உள்ள இடம்
   (லண்டன், நியூயோர்க், பிரான்ஸ்)

2. தமிழ் மறை எனப் போற்றப்படும் நூல்
   (திருக்குறள், நாலாயிர திவ்விய பிரபந்தம், கந்தபுராணம்)

3. புரோட்டின் மிகவும் அதிகம் உள்ள தானியம்
   (சோளம், அவரை, சோயாபீன்ஸ்)

4. ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பிறந்த இடம்
   (கரவெட்டி, கரம்பன், பாஷையூர்)

5. 'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்' என்பதில் உள்ள உறுமீன் என்பது
   (சிறிய மீன், முள்ளு மீன், பெரிய மீன்)

6. 'சுடுசோறு' என்பது
   (வினைத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை)

பெயர் : ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................


அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 66
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

குறிப்பு: விவிலியம் கற்போம் - 64,
வர்ணம் தீட்டும் போட்டி - 16
இவற்றின் முடிவுகள் ஜூன் மாதத்
தொண்டனில் வெளிவரும். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

MHB

# MODERN HARDWARE



General Hardware merchants,
Building materials, Aluminum fittings,
Window glasses, Paints, Flay woods,
MDF Boards, Power tools and
Hot water heater

35, 20F, Central Road, Batticaloa.

NME


# New Mordern Electricals

Dealers in : Electrical and
Electronic Goods Etc.

No: 20A, Central Road,
Batticaloa.

Dial : 065 2225877, Fax : 065 2223766

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media